விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 28 வெள்ளிக்கிழமை (11.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 174

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து



## நாடுகடந்த தமிழீழ அரசுக்கு புலிகள் வெனிசுலாவின் ஆதரவை பெற முயற்சி

### கியூபாவுக்கான இலங்கைத்தூதுவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ அரசுக்கு வெனிசுலா அரசின் தார்மீக ஆதரவை பெற தமிழீழ விடுதலைப்புலிகள் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்று கியூபாவுக்கான இலங்கைத் தூதுவர் தமாரா குணநாயகம் தெரிவித்தார்.

வெனிசுலாவுக்கு அரசின் உத்தரவின் பெயரில் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளமை குறித்து அந் நாட்டு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

லத்தின் அமெரிக்க (18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த சிம்லாவில்

(டெல்லி)

இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அங்கு தனது மனைவி ஷிராந்தியுடன் நேற்று இந்தியாவின் ஹிமாச்சலப் பிரதேசத்தின் புகழ் பெற்ற சுற்றுலாத்தலமான சிம்லா சென்றுள்ளார்.

அங்கு 2 நாள் அவர் ஓய்வெடுக்கிறார். இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் மூலம் இருவரும் அனந்தேல் ஹெலிபேடுக்கு சென்றனர். (18ஆம் பக்கம் பார்க்க)

# சீனா, இந்தியாவுடன் இலங்கை நட்பு இறுதியில் கண்ணீரில்தான் முடியும்

## ஆ.ஸி. இராஜதந்திரி கருத்து

(கொழும்பு)

சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடனான இலங்கையின் நட்பு இறுதியில் கண்ணீரில்தான் முடியும். புத்திசாலித்தனமாகச் செயற்படமுடியும் என்று இலங்கை நினைக்கிறது. இது மாபெரும் தவறாகும். ஆனால் இது பிழையான நினைப்பு. இலங்கை அதன் சுயாட்சியை இழக்க நேரும். இந்தியாவுக்கு தலையையும், சீனாவுக்கு வாலையும் காட்டும் இச்செயற்பாடு மிகவும் முட்டாள்தனமானது. இந்தியாவை மீறி சீனாவுடன் நட்பைப்பேணுவது ஆபத்தானது. (18ஆம் பக்கம் பார்க்க)

## 'எந்த விசாரணையையும் சந்திக்க தயார்' இந்தியாவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

என்னுடைய இந்திய விஜயம் சட்ட விரோதமானது அல்ல. இதேவேளை இங்கு விஜயம் செய்யக்கூடாது என்று இந்திய அரசாங்கம் எனக்கு எதுவித தடையினையும் விதிக்கவில்லை என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியா சென்றுள்ள (18ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் குறித்து டில்லி பொலிஸாருக்கு தகவல்

### சென்னை ஆணையர் பி.பி.சிக்குத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் நாட்டில் சில குற்றவியல் வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள பாரம்பரிய தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்து புதுடில்லி காவல் துறையினருக்கு தகவல் அனுப்பியுள்ளதாக சென்னை காவல்துறை ஆணையர் டி.இராஜேந்திரன் தெரிவித்திருக்கிறார்.

1989ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (18ஆம் பக்கம் பார்க்க)

## வவு. புனர்வாழ்வு முகாமில் 53 புலி ஜோடிகளுக்கு திருமணம்

(கொழும்பு)

வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் 53 ஜோடிகளுக்கு திருமண நிகழ்வு இடம்பெறவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கான வசதிகள் அரசாங்கத்தால் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் அங்கரிக்கப்பட்ட திருமண (18ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கொழும்பு வணிக வள நிலையத்தின் க.பொ.த. உயர்தரம் முன்னோடிப் பரீட்சை-2010

வணிகப் புள்ளிவிபரவியல்-II

பாட மாதிரி வினாத்தாள்

## வடமாகாணத்தில் பணியாற்ற சிங்கள கிராம சேவையாளர்கள்

(கொழும்பு)

வடமாகாணத்தில் பணியாற்றுவதற்காக தென்னிலங்கையில் ஓய்வு பெற்ற சுமார் 100 சிங்கள கிராம சேவகர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அந்த மாவட்டங்களில் காணப்படும் கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் சிங்கள அதிகாரிகளால் எவ்வாறு தமிழ் மக்களுக்குசேவை செய்ய முடியும் என கேள்வி எழுந்துள்ளது. (ந-5)

## உ.அ.அ. அலுவலகங்களை தரம் உயர்த்த முடிவு

(கொழும்பு)

உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களை பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி நிலை இலங்கையில் மோசம் அவுஸ்திரேலிய ஸ்தாபனம் அறிக்கை

(கொழும்பு)

அமைதி நிலைமை மிக மோசமான நிலையில் இருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் பொருளியல் மற்றும் அமைதிக்கான ஸ்தாபனத்தின் வருடாந்த கணிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் அமைதி நிலை எப்படி இருக்கிறது என்று இந்த அமைப்பு வருடாந்தம் ஆய்வு நடத்தி அறிக்கை வெளி யிடுவது வழமையாகும்.

149 நாடுகளை ஆய்வுக்கு உட்படுத்தி இந்த ஆண்டும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்தநாடுகளில் கடந்தவருடம் நிலவிய நிலைமைகளைகருத்தில் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டி (18ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-இந்திய உடன்படிக்கைகள் குறித்து பகிரங்கப்படுத்த வேண்டும்

### ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது இரண்டு நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தியாவுக்கும் (18ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

**BCHS**

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

## வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

**FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT**

**FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)**

**FOUNDATION DIPLOMA IN MANAGEMENT**

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை: G.C.E. (O/L) போதுமானது

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

## Access Programming

O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

## IELTS (International English Language Testing System)

(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

## Diploma in English Advanced Diploma in English

100 % பயிற்சி

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திறகமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

## Certificate In Personality Development / ஆளுமை விருத்திசெய்யும் பயிற்சி நெறி

ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!!!

- இன்று எமது பிரதேசத்தில் புதிய நிறுவனங்கள், வங்கிகள் தமது கிளைகளை திறந்தும் தகுதியானவர்களை அடையாளங் காணாத காரணத்தினால் அத்தொழில் வாய்ப்புக்கள் கைநழுவுகிறது. நீங்கள் பட்டங்களையோ, வேறு பல சான்றிதழ்களையோ வைத்திருப்பதினால் உங்களுக்கு வேலைகிடைத்துவிடுவதில்லை. எமது இப்பயிற்சி நெறியின் முக்கிய நோக்கம் எம்மவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உறுதி செய்வதே. ஆகவே இன்றே எம்முடன் இணைந்து உங்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள்....
- இப்பயிற்சி நெறியின் மூலம் Interview வை எவ்வாறு எதிர்கொள்வது அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது, அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலப்பயிற்சிகள்,Computer பயிற்சிகள், HR Management, Management, etc...etc.....என பலவிடயங்களை உள்ளடக்கியது. (01 Month)

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்கு சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

இப்பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியில் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலைவாய்பை பெற ஆவண செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0773501499 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

திகதி 19.06.2010, 23.06.2010, 25.06.2010 — காலை : 10.00 மணி, மாலை : 04.00 மணி


# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அருட்பணி யோசுவா ரட்ணம் அடிகளாரின் இரத்தினச் சிந்தனைகள் நூல் மற்றும் இயேசு நாமம் போற்றுவோம் இறுவட்டு ஆகியவற்றின் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு வேம்படி வீதியில் அமைந்துள்ள றிமர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-3)

# திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியத்தில்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010/2011 கல்வியாண்டுக்கான அடிப்படைச் சிங்கள சான்றிதழ் கற்கைநெறிக்கு பதிவு செய்தவர்களுக்கான நாட் பாடசாலை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

அத்துடன் யாழ்.பிராந்திய நிலையத்தில் சமூகவியல் இளமாணிப் பட்ட கற்கைநெறி 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான இறுதிப் பரீட்சை நாளை தொடக்கம் நடைபெறும்.

பட்டமேற்கல்வி டிப்ளோமா 2009/2010 கல்வியாண்டு மாணவர்களுக்கான மீட்டல் நாட் பாடசாலையில் நாளை காலை 9 மணிக்கு கல்வி முகாமைத்துவம், மறுநாள் கல்வி உளவியல் பாடநெறியும் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)


## காணி வீடு விற்பனை

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு சமீபமாக (200M) திருஞானசம்பந்தர் வீதியில் நன்னீர் வளங்களுடன் வீடும் காணியும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 0777043852, 0773313104

(666)


# தே.சே.வ கணக்கறிக்கை பாராளுமன்றத்தில்

தேசிய சேமிப்பு வங்கியின் வருடாந்த கணக்கறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை முடிபு செய்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் என்றவகையில் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். அதன்படி 2008 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிபடையும் வருடத்திற்கான தேசிய சேமிப்பு வங்கியின் வருடாந்த செயற்பாடுகள் மற்றும் கணக்கறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது (ந-5)

# ஆசிரியர் இடமாற்ற சபைக் கூட்டம்

வடமராட்சி வலயத்திற்குள்ளான ஆசிரியர் இடமாற்ற சபைக் கூட்டம் இன்று பி.ப.2 மணிக்கு வலயகல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களின் இடமாற்றங்களை ஆராய்ந்து இடமாற்றம் வழங்குவது தொடர்பாகவும் வழங்கப்பட்ட இடம் மாற்றங்களின் மேல்முறையீடு தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதால் இடமாற் சபையின் சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ந-19)

# வானிலை பற்றிய அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று வானிலையானது மப்பும் மந்தாரமுமாக இருக்கும் என்றும் மழையை எதிர்பார்க்க முடியாது என்றும்மணித்தியாலத்திற்கு காற்றின் வேகமானது 20 - 30 கிலோ மீற்றர் வரை வீசுமென்று திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி விபுஸ்பநாதன்தெரிவித்துள்ளார். (6)


# கண்காட்சி

FRIEDRICH EBERT STIFTUNG

VILUTHU Center For Human Resource Development

Colombo College of Politics

ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடாத்தும்
ஐரோப்பாவில் சமூக ஜனநாயகக் கோட்பாடுகள் வளர்ச்சியடைந்த
வரலாறு பற்றிய கண்காட்சி

இடம் :- யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

காலம் :- * ஜூன் 12 சனிக்கிழமை பி.ப.1.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை
* ஜூன் 13 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை

* கலந்துரையாடல்களுக்கு இடமுண்டு
* மாணவர்களுக்கு விசேட பயனுண்டு

→ அனுமதி இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஏற்பாட்டுக் குழுவினர்
விழுது நிறுவனம்

# இன்று ஒரு தகவல்

## மன இறுக்கம்

ஒருத்தர்“ கோயிலுக்கு போய் முடி இறக்கி விட்டு வரலாம் என்று இருக்கிறேன்” என்று ஒரு வருஷமாக சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் ஒரு நாளாவது அவர் போய் வந்த பாடில்லை.

“ஏன் சேர் அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறீர்கள்? ஒரு நாள் போய் மொட்டை போட்டுக் கொண்டு வந்து விட வேண்டியதுதானே” என்றேன்.

“நான் என்ன சேர் பண்ணுவேன்? ஏகப்பட்ட வேலை, எப்பபார்த்தாலும் டென்ஷன். கோயிலுக்குப் போகவே நேரம் கிடைக்க மாட்டேங்குது”என்றார்.

ஒரு வருஷம் கழித்து ஒருநாள் அவரை பார்த்தேன்.

தலை மொட்டையாக இருந்தது.

“ என்ன சேர், கோயிலுக்கு போய்யிட்டு வந்துட்டீங்களா? ”என்றேன்.

அவர் கோபமாக,“நான் எங்கே சேர் போனேன். அங்கே போக வேண்டிய அவசியமே இல்லாத அளவுக்கு முடியெல்லாம் தானாகவே கொட்டிப் போச்சு”என்றார்.

“எதனால அப்படி ஆச்சு?” என்று விசாரித்தேன்.

“டென்ஷன்தான் இதற்குக் காரணம் என்று டாக்டர் சொல்கிறார்”என்றார் அவர்.

இது சிலபேருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் கொத்துக் கொத்தாக முடி உதிர்வதற்கும் வழுக்கை விழுவதற்கும்- டென்ஷனும் ஒரு காரணம் என்பது தான் உண்மை.

டென்ஷனால் என்னென்ன பாதிப்புகள் வரும் தெரியுமா? டாக்டர்களை கேட்டால் அவர்கள் ஒரு பட்டியலையே சொல்கிறார்கள்.

தலைவலி, இடுப்புவலி, முதுகுவலி, அஜீரணம், மலச்சிக்கல், மூலவியாதி, சக்கரைவியாதி, இரத்த அழுத்தம், இதயக் கோளாறு அதிக மனஅழுத்தம், ஹிஸ்டீரியா, மனநோய்கள், முடி உதிர்தல், வழுக்கை போன்ற வியாதிகளில் எதுவேண்டுமானாலும் டென்ஷனால் வரலாமாம்.

ஒருத்தர் கடுமையான டென்ஷனில் இருக்கும் சமயத்தில் அவருடைய வயிற்றுக்குள் ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தார்களாம். எப்படி என்கிறீர்களா? Gastroscope என்ற ஒரு கருவி மூலமாக.

அப்படி ஆராய்ந்து பார்த்தபொழுது இளஞ்சிவப்பாக இருக்க வேண்டிய அந்த உட்பகுதி செக்கச் செவேலென தக்காளிப்பழம் போன்று இருந்ததாம். ஏன் அப்படி ஆகிறது தெரியுமா? டென்ஷனாக இருக்கும் பொழுது வயிற்றில் அதிக அமிலம் சுரக்கிறதாம். அதனால் இப்படிச் சிவந்து விடுகிறதாம். அடிக்கடி இப்படி ஆகினால் Hyperacidity என்ற நிலை உண்டாகுமாம். அது முற்றிய நிலைமையில் அல்சராக கூட மாறி விடுமாம்.

டென்ஷன் என்பது இயற்கை நமக்கு கொடுத்திருக்கும் ஒரு எச்சரிக்கை உணர்வு. ஒரு ஆபத்து வரும் போது அதை எதிர்த்துப் போராடுவதற்கு அல்லது தப்பி ஓடுவதற்கு தயாராகி விடுகிறோம் அல்லவா... அது மாதிரித்தான்.

ஆனால் இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் எதற்கெடுத்தாலும் நமக்கென்று ஒரு கௌரவத்தை எதிர்பார்க்கிறோம். அந்த கௌரவத்திற்கு ஒரு குறைவு வரும்போல் இருந்தால் உடனே டென்ஷன்.

வரவேண்டிய பஸ் நேரமுக்கு வரவில்லை என்றால் டென்ஷன்.

அநாவசியமாக உடம்பையும் மனத்தையும் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள். எதையும் ஈஸியாக எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் Positive ஆக நினைக்கக் கற்றுக் கொள்ளுங்கள் . Negative ஆக யோசித்துக் கொண்டிருக்காதீர்கள்.

வீட்டில் ஒரு பொருள் தீர்ந்து விட்டால் ‘அது இல்லை’ என்று நினைக்காதீர்கள். நாளைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்று நினையுங்கள்.

எதற்கெடுத்தாலும் எனக்கு நேரமில்லை என்று சொல்லும் பழக்கத்தை விட்டு விடுங்கள் . எதையும் முறையாக திட்டம் போட்டு செயல்படுத்துங்கள்.

மனஇறுக்கம் இல்லாமல் வாழும் வாழ்க்கை தான் மகத்தான வாழ்க்கை. அதிகமாக ஆசைப்படுவதும் டென்ஷனுக்கு ஒரு காரணம்.

ஒருத்தர் இருந்தார். அவர் ஒரு சின்ன டென்ஷனுக்குக் கூட இடம் கொடார். அதிகமாக ஆசைப்படவும் மாட்டார். ஒருநாள் ஆண்டவனே அவரைத் தேடி வந்து “நீ எவ்வளவு காலம் உயிரோடிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாய்?” என்று கேட்டார்.

அதற்கு இவர் ,“நான் அதிகமாக ஒன்றும் ஆசைப்படவில்லை. நான் சாகிற வரைக்கும் உயிரோட இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதுபோதும்”என்றாராம். டென்ஷன் இல்லாத ஆசாமி.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்பட்ட உயர்தர பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான, வர்த்தக பாடப் பரீட்சையில் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதல் 30 மாணவர்களின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**தரம்-13**

**கணிதப்பிரிவு**

ரி.பிரணவன்(ஹாட்லிக்கல்லூரி), எஸ். யசோதரன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.ஜெயராம் (ஹாட்லிக்கல்லூரி), எஸ். சுமங்கலி (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். சிவராம் (ஹாட்லிக் கல்லூரி), எம்.பிரிந்தாபன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.உபமன்யு, எஸ். கௌசல்யன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஏ.கரிகாலன்(ஹாட்லிக் கல்லூரி), ஏ.லஜீரன்(யாழ்.இந்துக்கல்லூரி), எஸ். ரஜீபவன் (ஹாட்லிக் கல்லூரி),

எல். நிலுசியா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), எஸ். நிரோசன் (யாழ். இந்துக் கல்லூரி),ஏ.அனற்நிசாந்தா (வேம்படி மகளிர் கல்லூரி), பி.விஸ்ணுகாந்த் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.சிறிகுமரன் (ஹாட்லிக் கல்லூரி), ஐ.ஞானசுகிர்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ். வசந்த் (கொக்குவில் இந்துக்கல்லூரி), ஐ. ஸ்ரீசியாமளன் (யாழ். இந்துக் கல்லூரி),என். பவிந்திரன் (யாழ். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி),

எஸ். கௌதமன்(யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி),ஏ.சசிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆர்.செல்வபவிதா(கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி), பி.யனோத் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆர்.மதுசாந்தி(வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். கோபிகாந்தன், எல். கோபிநாத் (யாழ்.இந்துக் கல்லூரி), எம். விஜிகுகன் (ஹாட்லிக் கல்லூரி), ஜெ. ஜெயதர்சினி,ஜெ. அனுசா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).,

**உயிரியல் பிரிவு**

ஏ.நிதர்சன்(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி),எஸ். விசாகன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ். விதுரன், என்.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), வி.நிசாந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.கஜானன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.சாயிதா(வட இந்து மகளிர் கல்லூரி), எஸ்.டினேஸ் காந்த் (யாழ் இந்துக் கல்லூரி), ஆர்.மாதங்கி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.பார்த்தீபன்(ஹாட்லிக் கல் லூரி), பி.துசியந்தன் (சென். ஜோன்ஸ் கல்லூரி),

எஸ்.சுமணன் (சாவகச் சேரி இந்துக் கல்லூரி), கே.நிருஜன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். அனோஜன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சபேசன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கே. சிவசுதன்ஹாட்லிக் கல்லூரி), கே.லாவன்ஜா (இளவாலை மடம் ம.வி)

எஸ்.கேனகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.சாமந்தி (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஜி.தேவகி(வட இந்து மகளிர் கல்லூரி),ஜி. தாட்சாயினி(வேம்படிமகளிர் கல்லூரி), ஜெ.யூலியஸ்கெலினா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி),

எஸ்.தாரணி(வேம்படி மகளிர் கல்லூரி) , ஆர். வனோஜிதன் (ஹாட்லிக் கல்லூரி),ஆர். சாயிபானு(வேம்படி மகளிர் கல்லூரி), ரி.சுதாசினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) , எ.தனேஸ்(சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி),ரி.கிருஷ்ணப்பிரியா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி),எஸ்.றுக்ஷிகா,பி.துவாரகா (வேம்படி மகளிர் கல்லூரி),

**வர்த்தகப்பிரிவு**

பி.ராஜாராம்(ஹாட்லிக் கல்லூரி), கே. அனித்தா(ஞானாசிரியர் கல்லூரி), ஏ. லிதர்சினி(அருணோதயக்கல்லூரி),என். ஜீவன் (யாழ். இந்துக்கல்லூரி),பி.தர்சிகன்,ரி.மயூரி(ஹாட்லிக்கல்லூரி), வை. சரணிஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி),

வி.பிரியங்கா(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி),என்.சங்கரண்ஜா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), ரி.நவீனன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), ஏ.அகல்ஜா (வட மத்திய மகளிர் கல்லூரி), பி.தாரணி (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.பிரசாத் (யாழ்.இந்து கல்லூரி), எஸ்.கிரிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி),எஸ்.நீரஜா (அருணோதயக்கல்லூரி),

கே.சுயாதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), லக்ஸ்ரெலா (வேம்படி மகளிர் கல்லூரி),வி.விஜிதா (வட இந்து மகளிர் கல்லூரி), ஜி.மாலினி (வட இந்து மகளிர் கல்லூரி , ஆர். குகேந்திரன்(ஹாட்லிக்கல்லூரி), என்.அச்சுதன் (யாழ்.இந்து கல்லூரி), ஆர்.கிருத்திகா(மெதடிஸ்த மகளிர் கல்லூரி),

ஏ.பிரதாப் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி),ஆர்.தர்சினி(இளவாலை மடம் ம.வி),ரி. மேகலா (யாழ்ப்பாணக் கல்லூரி), கே.சிவகௌரி (ஞானாசிரியர் கல்லூரி), ஏ.கடொற்கஜன் (யாழ்.இந்துக் கல்லூரி),ரி.மதனிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,நிவேதா (வேம்படி மகளிர் கல்லூரி , வி. ரோணுகா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி).

(தொடரும்)

# இராசி பலன்

*11.06.2010*
*வைகாசி 28,வெள்ளிக்கிழமை*
*சதுர்த்தசி மாலை 6.34 மணிவரை*
*கார்த்திகை முற்பகல் 10.45 மணிவரை*
*இராகுகாலம் 10.22 - 11.52 மணிவரை*
*சுபநேரம் 5.52 - 7.22 மணிவரை*
*பழுகாமம் மாவேற்குடாப்பிள்ளையார் கொடி, ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரி கொடி, உடுப்பிட்டி வீரபத்திரர் கொடி, போதாயன அமாவாசை.*

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, தனவிரயம், ஆரோக்கியக் குறைவு, வேலைச் சுமை. |
| இடபம் | தெய்வசிந்தை, போசன சுகம், நல்லமுயற்சி, உறவினர் வருகை. |
| மிதுனம் | காரிய அலைச்சல், தெய்வதரிசனம், சயன சுகக் குறைவு, உஷ்ண வியாதி. |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, புகழ், விருந்துபசாரம். |
| சிங்கம் | அதிகாரம், தொழில் நன்மை, தூரதேசச் செய்தி, பிறர் உதவி. |
| கன்னி | ஆன்றோர் சந்திப்பு, பிரயாணம், கட்டுப்படுதல், பயந்த சுபாவம். |
| துலாம் | எதிர்பாராத அச்சம், முயற்சி தாமதம், அபகீர்த்தி, உடல் நலக் குறைவு. |
| விருச்சிகம் | குடும்ப சுகம், தெய்வதரிசனம், தனவருவாய், முயற்சி பலிதம். |
| தனுசு | செய்தொழில் விருத்தி, அதிகாரம், காரிய நன்மை, தேக நலன். |
| மகரம் | வியாபார நன்மை, தெய்வ சிந்தை, சுபசெலவு, முயற்சி தாமதம். |
| கும்பம் | மாதா சுகம், அதிக பிரயாசை, போசன சுகம், மனச்சஞ்சலம். |
| மீனம் | தெய்வ தரிசனம், காரிய நன்மை, உறவினர் உதவி, பொருள் சேர்க்கை. |

வளவன்

# அதிபர்களுக்கான செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலய அதிபர்களுக்கான ESDFP, ESDP, Quality Input தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை கிளிநொச்சி வலயக் கல்வி பணி மனையில் நடைபெறவுள்ளது.


இச்செயலமர்வுக்கு சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா கேட்டுக் கொள்கின்றார். (6-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 90 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100-120 | 110 | 80 |
| தக்காளி | 120-140 | 140 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40-50 | 50 | 40 |
| கோவா | 80-100 | 100 | 95 |
| கரட் | 200 | 190 | 150 |
| பூசனி | 25 | 40 | 50 |
| புடோல் | 20-25 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100-110 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 90-100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | 30 | 70 | 60 |
| பயற்றங்காய் | 60 | 70 | 90 |
| லீக்ஸ் | 130 | 150 | 130 |
| பீற்றூட் | 100 | 100 | 90 |
| கறிமிளகாய் | 140 | 140 | 130 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 100 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 30 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின்
# மலையகக் கல்வித் தரிசனம் 16

2010 மே 8ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கெல்லாம் பயண ஆயத்தங்கள் முற்றுப்பெற்றன. ஹொப்டன் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து சற்றுத் தொலைவில் பஸ் தரித்துநின்றது.



பராக்கிரமபாகு சிலை

அதிபர் தியாகசுந்தரத்திடம் விடை பெற்றுக்கொண்டு பஸ்ஸின் தரிப்பிடத்தை நோக்கிச் சென்றோம்.

தேவாரத்திருமுறையுடனும், கத்தோலிக்க திருமறையுடனும் பிரார்த்தனை நடந்தேற, பஸ் பயணம் ஆரம்பித்தது.

பொலநறுவை, அநுராதபுரம் போன்ற இடங்களின் வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கூடவே பராக்கிரமபாகு சமுத்திரத்தில் நீராடவேண்டுமென்ற விருப்பம்.

இந்த விருப்பங்களோடு பஸ் வேகமெடுக்க அதிபர்களின், இசைக்கச்சேரி ஓடும் பஸ்ஸில் களைகட்டியது.புதிய சினிமாப்பாடல் என்ற பேச்சுக்கே இடமில்லை. எல்லாம் பழைய தத்துவப் பாடல்கள்.



பராக்கிரமபாகு மன்னனின் அரண்மனை

இடையிடையே பக்திப்பாடல்களும் சேர்ந்துகொண்டன. யா/திருக்குடும்ப கன்னியர்மட அதிபர் அருட்சகோதரி நெவிஸ் லடிலஸ் அவர்களின் சாரீரத்தைக் கேட்டபோது பி.சுசீலா எந்த மூலைக் கென்றாகிவிட்டது.

அருட்சகோதரி நெவிஸ் லடிலஸ் அவர்கள் பி.சுசீலா என்றால், யாழ். பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி பாடகி சித்திராவுக்கு இணையானவர் என்றுதான் கூறவேண்டும்.

அந்தளவிற்கு அவர்களின் சாரீரம் பெறுமதி மிக்கதாய் அமைந்திருந்தன.

இப்போது ஓடும் பஸ்ஸில் இசைஞானி இளையராஜாவின் பணியை யாழ். கல்வி வலய ஆசிரிய வள நிலைய முகாமைத்துவ உதவியாளர் துஸ்யந்தன், எடுத்துக்கொண்டார்.

தாளம்,இராகம், பல்லவி நடந்து கொண்டிருந்தவேளையிலும் நித்திரா தேவியின் அரவணைப்பில் இருந்தவர்களையும் மறந்துவிடுவது அவ்வளவு நல்லதல்ல.

### பொலநறுவையில்...

பொலநறுவையில் பராக்கிராம மன்னனின் அரண்மனை அமைந்திருந்த இடங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது.

தென்பகுதிக்கான கல்விச்சுற்றுலாவுக்குச் செல்லும் எவரும் இப்பகுதிகளைப் பார்க்காமல் விட்டுவிடுவதில்லை.

பராக்கிரமபாகு மன்னனின் ராஜசபை, அரண்மனை, இவை காலத்தால் சேதமடைந்தாலும் காட்சிப் பொருட்களாக இன்னமும் பேணப்பட்டு வருவது சிறப்பித்துக் கூறக்கூடிய விடயமே.

இங்கே காணப்படும் சிலை மன்னன் பராக்கிரமபாகுவினுடையது என்று கூறப்படுகின்றது.ஆனால்,இது பராக்கிரமபாகு மன்னனுடைய சிலை அல்ல. புலசித்தி ரிஷி என்ற இந்து முனிவருடைய சிலை என்று கூறுவோருமுளர்.

சிலை யாருடையது என்ற கேள்விகள் எல்லாம் நாடற்றவர்களுக்கு எதற்கு - இந்த மனநிலை தமிழர்களுக்கு இருக்கவே செய்யும்.

பராக்கிரமபாகு மன்னனின் அரச மாளிகை உடைந்துபோனாலும் அதன் பிரமாண்டத்தைச் சுட்டிநிற்கின்றது.

ஏழுமாடிகளைக் கொண்ட மாளிகையென்று ஆய்வாளர்கள் கூறுவர். அதன் எச்சங்களே இப்போது மிச்சமாகியுள்ளன.

இந்த மாளிகை கலிங்க மன்னனின் படையெடுப்பால் அழிந்துபோனதென்ற வரலாற்றுப் பதிவுகளையும் இவ்விடத்தில் கூறுவது அறியும் ஆர்வம் உடையோர்க்கு உதவியாக அமையும்.



பராக்கிரமபாகு மன்னனின் ராஜசபை

பராக்கிரமபாகு மன்னனின் அரண்மனைக்கு மிக அண்மையாக ராஜசபை மண்டபம் அமைந்துள்ளது.

கருங்கற்களினால் அமைக்கப்பட்ட இம் மண்டபம் மந்திரிகளும் நீதித்துறை சார்ந்தவர்களும் கூடி மன்னனுக்கு ஆலோசனை வழங்கும் இடமாக இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

பொலநறுவையில் உள்ள சிவன் கோவிலின் சிதைவுகளைக் கண்டபோது கன்னத்தின் ஓரங்கள் நனைந்துகொண்டன.

கல்விச் சுற்றுலா என்ற கொடியேற்றம் தீர்த்தத் திருவிழாவோடு நிறைவு பெறுவதுபோல பராக்கிரம சமுத்திரத்தில் ஆண் அதிபர்கள் நீராடினர்.

நீராடலுக்குப் பின் மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கிய பஸ் பயணம் தொடர்ந்தது.



பராக்கிரம சமுத்திரம்

அநுராதபுர நகரில் தரித்து நின்றதைத் தொடர்ந்து பஸ் முகமாலையைத் தாண்டியவுடன், நன்றிகூறும் பணி ஆரம்பமானது. ஓடும் பஸ்ஸில் நன்றி கூறப்பட்டது. ஆசிரிய வள நிலைய முகாமையாளர் ஞா.இரட்ணசிங்கமும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு ஜெரோம் அடிகளாரும் நன்றி கூறிக்கொண்டனர்.

எமது கல்விச் சுற்றுலாப் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துதவிய யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களுக்கும் அனுசரணைப் பணியை வழங்கிய யுனிசெப் அமைப்பிற்கும் விசேடமாக நன்றி கூறப்பட்டது.

கூடவே, கல்விச் சுற்றுலாவில் ஒவ்வொரு பொறுப்புக்களையும் செம்மையாக நிறைவேற்றிய அதிபர்கள், பஸ் சேவையை சிறப்பாக வழங்கிய உரிமையாளர் மற்றும் சாரதிகள், யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பணியாளர் ஜெயரட்ணம் ஆகியோரும் நன்றிக்குரியவர்களாகினர்.

நன்றியுரையின் நிறைவோடு பஸ், யாழ்.இந்து மகளிர் கல்லூரியை இரவு 9 மணியளவில் வந்தடைந்தது.

பயனுள்ள இக்கல்விச் சுற்றுலா எங்கள் யாழ்ப்பாண மண்ணிலும் பயனுறுதிமிக்கதாய் அமையும் என்ற நம்பிக்கைகளோடு வீடுகளை நோக்கிப் புறப்பட்டோம். (முற்றும்)

**விதுரன்**

# வெளிச் சக்திகளின் அழுத்தம் காரணமாகவே மீள் குடியேற்ற நடவடிக்கைகள் துரிதம்

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிச்சக்திகளின் அழுத்தம் காரணமாகவே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அழுத்தங்கள் பிரயோகிக்கப்படாமல் இருந்தால் மீள்குடியேற்றப்படும் மக்களின் வாழ்வாதாரங்களை மேலும் வலுப்படுத்தியிருக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் பெரும்போகக் காலப்பகுதியில் குறித்த இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றவே தாம் திட்டமிட்டிருந்ததாகவும் பெரும்போக பகுதியில் மீள் குடியேற்றப்படுவதன் மூலம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய சாத்தியம் கிட்டியிருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் வடக்கிற்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர்கள் வடக்கில் சுதந்திரமான முறையில் நடமாடுவதற்கு தற்போது சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது மகிழ்ச்சி கரமான விடயம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றதுடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறமும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4)

# சூழலை மாசுபடுத்தும் — பாதீனியம் செடி —

(வேலணை)

கோப்பாய் சந்திப் பகுதியிலும் அதனை அண்மித்த தனியார் காணிகளிலும் பெரும் தொகையான சூழலை மாசுபடுத்தும் பாதீனியம் செடிகள் வளர்ந்து பூக்களுடன் காணப்படுகின்றன.

அதாவது கோப்பாய் சந்தியில் பருத்தித்துறை வீதியை அண்டிய பகுதியிலும் மழை நீர் வழிந்தோடும் பிரதான வாய்க்கால் பகுதியிலும் மானிப்பாய் வீதியை அண்டிய பகுதியிலும் பரவலாக பாதீனியம் செடியின் பரம்பல் காணப்படுகின்றது.

இதை முற்றாக அழிப்பதற்கு சம்மந்தப்பட்ட நிர்வாகத்தினர் முன் வரவேண்டும் என்பதுடன் மக்களிடையே இச்செடியின் தாக்கத்தை பற்றி பரப்புரை செய்வதன் மூலம் மக்களுக்கு இதுபற்றிய தெளிவை ஏற்படுத்தி வழிசமைக்க வேண்டும்.

மேலும் இச்செடிகள் காணப்படும் தனியார் காணிகளின் உரிமையாளர்களை இனம் கண்டு இச்செடியை அழிக்க கட்டளையிடலாம் என்றும் இந்நடவடிக்கையினை மேற்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் இச்செடியை முழுமையாக அழிக்க முடியும் என சூழல் ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

தற்போது யாழ்.குடாநாட்டில் கோப்பாய் பகுதியிலேயே இச் செடி கூடுதலாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (6-22)

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயக்கல்வி அலுவலகத்தினால் க.பொ.த உயர்தரத்தில் சங்கீதம், நடனம், சித்திர பாடம் கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 14, 15, 16, 17, 18 ஆகிய தினங்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் சங்கீதபாட மாணவர்களுக்கு யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் சித்திரம், நடனம் ஆகிய பாடங்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய வள நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் இவ்வருடம் க.பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற சகல மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (6-4)

# மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 20-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு வடமராட்சி விளையாட்டு கழகங்களுக்கு இடையே நடைபெற்று வந்த 20-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 32 அணிகள் பங்குபற்றின.

போட்டிகளில் 8 சிறந்த அணிகள் கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. இன்று கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர் மலையங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகமும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு அல்வாய் கலைமகள் வி.கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோத வுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி நவ ஜீவன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை வியைாட்டுக்கழகம் மோத வுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அரை இறுதிப் போட்டிக்கு 4 அணிகள் தகுதி பெறவுள்ளன. (6-24)

# நடமாடும் சேவை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை பொலிஸாரினால் நடமாடும் சேவை ஒன்று நாளை சனிக்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

இதன்போது தொலைத்த அடையாள அட்டைகள், சாரதி விண்ணப்பப் பத்திரங்கள் போன்ற விடயங்கள் புதுப்பித்துக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நெல்லியடி பொலிசாரினால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது பொலிஸாரினால் இவ்வாறான நடமாடும் சேவைகள் தொடர்ந்தும் நடத்தப்படும் என காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் ஹெட்டியாராச்சி பண்டார தெரிவித்தார். (6-10)

# விஷ விதைகளை உண்ட மாணவர்கள் — வைத்தியசாலையில் அனுமதி —


(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தில் ஒருவகை விஷ விதைகளை உண்ட 12 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பிங்கிரியா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 12 பேர் இரு கட்டங்களில் இவ்வாறு அனுமதிக்கப்பட்டதாக வைத்திய அதிகாரி உபாலி சிங்க தெரிவித்தார்.

இவர்களில் ஒரு மாணவியும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுவதுடன் இவர்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டியுள்ளதாக வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வாந்தி,மயக்கம், வயிற்றுவலி போன்ற உபாதைகளால் இவர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (6-4)

# தனியிசைப் போட்டியில் முதலாமிடம்



வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண நிலைத் தமிழ்மொழித் தினப் போட்டியில் யா/செங்குந்த இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் கமலகாந்தன் வர்ஜிகன் பிரிவு 5 இற்கான இசை தனி நிகழ்ச்சியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (6-136)


பரராஜசேகரப்பிள்ளையார் துணை

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

திருநெறிய தமிழ்மறைக் கழகம் அறநெறிப் பாடசாலை நடாத்தும்

**திருமுறை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் 2010**

இடம் :- கல்யாண மண்டபம்

காலம் :- 12.06.2010 சனிக்கிழமை மாலை 03.00 மணி

தலைவர் :- திரு. ச.முகுந்தன் ஆசிரியர்

பிரதம விருந்தினர்

**திரு எம்.ஜி.எம். காண்டீபன்**

உதவிப்பணிப்பாளர் (நிதி) இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சிறப்பு விருந்தினர்

**திரு.கே. சிவராசா**

இணைப்பாளர் (வெளிவாரி அலகு), யாழ். பல்கலைக்கழகம்.

**திரு.ஆ.இராசரத்தினம்**

பிரதி கணக்காய்வாளர் நாயகம், கொழும்பு.

**கௌரவ விருந்தினர்கள்**

திரு.இ.சிவகுமார் (இலண்டன்) திரு.வி.மோகன் (கனடா)

திரு.ஐ.பாலசுப்பிரமணியம் (கனடா) திரு.நா.சந்திரகுமார் (கனடா)

திரு.கா.திலீபன் (இலண்டன்) திரு.பா.நரேந்திரன் (இலண்டன்)

வாழ்த்துரை

**போசகர் பேராசிரியர் க.தேவராசா**

பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-406)

இணுவில் 05.06.2010

திருநெறிய தமிழ் மறைக்கழகம் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில்


# உதைப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி அமெ.மிஷன் சம்பியன்

(கரவெட்டி)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 07 பேர் கொண்ட உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வடமராட்சியில் இரு பலம் வாய்ந்த அணிகள் மோதின.

கடந்த செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட சம்பியனான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகிய 5 ஆவது நிமிடங்களில் உடுப்பிட்டி அமெ. மிஷன் முன் களவீரர் எஸ்.அரிகரன் அடித்த பந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீரரில் பட்டு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஒரு கோலைப் பெற்றது.

ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடை பெற்று இடைவேளை வரை உடுப்பிட்டி அமெ.மிஷன் கல்லூரி அணி ஒரு கோல் முன்னிலையில் இருந்தது.தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளின் முன்கள தற்காப்பு வீரர்களின் சாதுரியமான ஆட்டத்தால் முன்கள வீரர்களின் பந்துகளை தடுத்தாடிக் கொண்டிருந்தன.

இவ்வேளையில் இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து 13 ஆவது நிமிடத்தில் எஸ்.அரிகரன் மீண்டுமொரு கோலைப் போட்டு தனது அணியை மேலும் வலுப்படுத்தினார்.

இறுதியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (6-24)

# வருடாந்த உற்சவம்

(வேலணை)

கோப்பாய் பிராமணஓடை மகிழடி உக்கிர வைரவர் கோவிலின் வருடாந்த உற்சவ பெருவிழா கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகிறது.

இக்கோயிலின் திருவிழாவை முன்னிட்டு இப்பகுதியில் இடம் பெயர்ந்து கொழும்பு பகுதியில் வசித்துவரும் பத்தர்கள் தற்போது நாட்டின் அமைதி சூழலில் மீளவும் வந்து கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-22)



சமுர்த்தி மகா சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தின கொடிவார நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகத்திற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக தலைமையக முகாமையாளர் கொடியை அணிவிப்பதையும் போட்டியில் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணிகளையும் போட்டியில் வெற்றிபெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணித் தலைவிக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ். அரச அதிபரிடம் வினவியபோது ஆறுமாத காலம் மட்டும் தான் இவ் நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டதாகவும் இந்நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (6)




## டெங்கு நோய் கட்டுப்பாட்டில் பொதுமக்களின் பங்களிப்பு அவசியம்

### வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் பொதுமக்கள் ஒத்துழைப்பினை நல்குமாறு யாழ். பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொள்கின்றார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் பொதுமக்களின் ஒத்துழைப்பினை நாம் எதிர்பார்க்கின்றோம். ஒவ்வொரு நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் தனிப்பட்ட வீடுகளிலும் டெங்கு கட்டுப்பாட்டு சுத்திகரிப்பு பணிகள் இடம்பெறவேண்டும். இச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்கள் சுத்திகரிக்கப்படாது காணப்பட்டால் அவை பற்றிய தகவல்களை உங்கள் பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அலுவலக நேரத்தில் (காலை 8 மணி தொடக்கம்- மாலை 3.30 மணிவரை) அறியத்தாருங்கள்.

சம்பந்தப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக உடனடியாக பொருத்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பெயரும் , தொலைபேசி இலக்கமும் வருமாறு,

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை (021 222 2278), யாழ்ப்பாணம்(021 222 2645), நல்லூர் (021 3207155), கோப்பாய்(021 3213615), உடுவில்(021 3207157), தெல்லிப்பளை (021 3213620),பருத்தித்துறை( 021 226 4482),கரவெட்டி(021 3207153), சாவகச்சேரி(021 3213621), சண்டிலிப்பாய்(0213 207154), சங்கானை( 021 3213614), ஊர்காவற்றுறை(0213213588). (6)

## வருடாந்த விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் வீதிக்கருகாமையில் உள்ள மைதானத்தில் கணபதி படிப்பக தலைவர் பூ.அகமணிதேவர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர் ஒன்றியத் தலைவர் எஸ்.ஜே.செல்வராசா பிரதம விருந்தினராகவும் வல்வை மகளிர் மகாவித்தியாலய பதில் அதிபர் திருமதி க.செல்வசுந்தரம், வடமராட்சி வலய முன்பள்ளிகள் இணைப்பாளர் திருமதி சு.சுரேஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6)

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும்

(தனங்கிளப்பு)

நீர்வேலி வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் உறுப்புரிமை பெற்றுள்ள அங்கத்தவர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6-37)

## யாழ்.மத்திய கல்லூரியில் இரு நாட்கள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், FRIEDRICH EBERT STIFTUNG ஜேர்மனிய அமைப்பினருடன் இணைந்து "சுதந்திரம் மற்றும் சமூக நீதிக்காக -ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் வரலாறு மற்றும் இலங்கையின் சமூக ஜனநாயகத்தின் செல்நெறி" என்னும் தலைப்பில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து சமூக ஜனநாயக அரசியல் அரங்குகளும் நடைமுறை அரசியலும் பற்றிய ஒரு அறிதலையும் அதனூடாக சுதந்திரத்தையும் சமூக நீதியையும் நோக்கி செல்லத்தக்க வகையில் இருநாள் கண்காட்சியினை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் றெமெய்ன் குக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இதில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்ப வைபவத்தைத் தொடர்ந்து மதியம் 12 மணிக்கு கண்காட்சி ஆரம்பமாகி மாலை 6 மணிவரையும் நடைபெற்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 6 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் நோக்கம் "சமூக நீதிக்கானதும் அதன் பலத்தை ஒருமைப்பாட்டில் நிரூபிப்பதுமான சுதந்திரத்தை நோக்கி அனைவரையும் வழிநடத்திச் செல்லும் ஒரு முயற்சியாகும்" என மையத்தின் மாவட்ட அலுவலர் கி.சுதாகரன் அறிவித்துள்ளார். (6-4)

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக எழுச்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சேவா சங்கத்துடன் இணைந்து இந்து இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப் பட்டறை ஒன்றினை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

இவ் ஆன்மீக எழுச்சிப் பட்டறையில் பங்குகொண்டு பயன்பெற ஆர்வமுள்ள யாழ் .மாவட்ட இந்து இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பயிற்சி ஏழு நாட்கள் வதிவிடப் பயிற்சியாக அமையும் எனவும் இப் பயிற்சியின் போது ஆன்மீக உரைகள், தலைமைத்துவப் பயிற்சி, யோகாசனம், தியானம், ஆன்மீக செயலமர்வுகள் போன்றன இடம்பெறவுள்ளன.

இப் பயிற்சிக்கு 16 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இளைஞர்கள், யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பெயர்,பிறந்த திகதி , தாம் சார்ந்த ஆலயம், இந்துமன்றம் அல்லது அறநெறிப் பாடசாலை என்பவற்றின் சொந்த முகவரி, தொலைபேசி இலக்கம், உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மாவட்டம், கல்வித் தகைமை போன்ற விபரங்களை தெளிவாகக் குறிப்பிட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலிவீதி, கொழும்பு -4 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இந்து இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப் பட்டறை" எனக் குறிப்பிடல் வேண்டும்.

மேலும் தகவல்களை பெற விரும்புவோர் 011 2552641, 011 2505403 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (6-4)

## மண்டைதீவு உயர்பாதுகாப்பு வலயத்திற்கு மக்கள் செல்ல கட்டுப்பாட்டுடன் அனுமதி

(யாழ்ப்பாணம்)



மண்டைதீவு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளாகவுள்ள 3,5 ஆம் வட்டாரங்க ளைச் சேர்ந்த மக்களின் உடைமைகளைச் சென்று பார்வையிட நேற்று முன்தினம் கடற்படையினர் கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கினர்.

கடற்படையினரால் அறிவிக்கப்பட்ட பிரகாரம் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மண்டைதீவு கடற்படை முகாமிற்கு முன்பாக நேற்று முன்தினம் கூடினர்.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள உடைமைகளைச் சென்று பார்வையிட தலா 5 பேர் வீதம் பதிவு செய்து கடற்படையினர் அழைத்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வன்னியில் சேவையாற்ற அனுமதியில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வன்னியில் சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வன்னியில் தொண்டுகளை மேற்கொள்ள வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அனுமதியளிக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் 3 ஆயிரம் அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்கி வந்ததாகவும், இவை புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதாக புலனாய்வு பிரிவினர் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

குறித்த வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உபகரணங்கள் மற்றும் பொருட்களை படையினர் கைப்பற்றியிருந்ததாக கடந்த காலங்களில் திவயின பத்திரிகைச் செய்தி வெளியிட்டிருந்தது.

எனவே எதிர்காலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வன்னியில் கடமை யாற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வன்னி மக்களுக்கு அதிகளவான உதவிகள் தேவைப்படுவதாகவும் இதனால் தொண்டு நிறுவனங்கள் உதவி களை நிறுத்தக்கூடாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (6-4)

# மாகாணசபை உறுப்பினர்களுக்கு விரைவில் ஓய்வூதியம்

மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மாகாணசபையில் பத்து ஆண்டுகளை பூர்த்தி செய்யும் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு இவ்வாறு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

மாகாண ஆளுநர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென ஆளுநர்கள் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது குறித்த வரைவுத் திட்டசட்ட மூலம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, ஆய்வு நடத்திய பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆளுநர்கள் மட்டுமன்றி, முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களு க்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டு மென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (6-4)

# குடிநீருக்கு அலையும் மீள்குடியேறிய மக்கள்

(கொழும்பு)

வன்னியில் மீளக்குடியேறிய மக்கள் போதிய ளவு குடிநீர் கிடைக்காமல் திண்டாடுகின்றார்கள்.

பாதுகாப்புப் படையினரால் வழங்கப்படும் குடிநீர் பாவனைக்குப் போதாமையினால் இவர்கள் நல்ல தண்ணீர்க்கிணற்றைத் தேடி அலைகின்றார்கள்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் மீள்குடியேற்றம் தற்பொழுது வேகமாக இடம் பெற்று வருகின்றது .அங்குள்ள கிணறு களிலுள்ள நீர் பாவனைக்கு ஏற்றவாறு இல்லாததினால் பாதுகாப்புப் படையினர் வீடுவீடாகத் தாங்கி மூலம் மட்டுப்படு த்தப்பட்ட அளவில் குடிநீரை வழங்கி வருகிறார்கள்.

அங்குள்ள நல்ல தண்ணீர்க் கிணறு கள் ஒரு வருடத்திற்கு மேலாகப் பயன்படுத்தாமல் இருந்ததால் போர்க்காலச் சூழ்நிலையினாலும் மாசடைந்துவிட்டன.

பிரதேச சபையினால் ஒருசில கிணறுகள் இறைத்துக் கொடுக்கப்பட்ட போதிலும் இறைப்பதற்கான கூலி அதிகரித்துள்ளதால் மக்கள் தங்கள் கிணறுகளை இறைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்.

எனவே பொது ஸ்தாபனங்கள் அல்லது அரசாங்கம் கிணறுகளை இலவசமாக இறைத்துக் கொடுத்து குடிநீர்ப் பிரச்சினைக் குத் தீர்வு காண முன்வர வேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (6-4)

# இந்தியாவிலிருந்து மருந்துகள் இறக்குமதி

இதய நோயாளர்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ஊசி மருந்துகள் இந்தியாவிலிருந்து விமானம் மூலம் கொண்டுவரப்பட்டதாகச் சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது.

இந்த ஊசி மருந்துப் பொருட்களுடன் இருவகை நோயெதிர்ப்பு மருந்துகளும் கொண்டு வரப்பட்டதாகச் சுகாதார அமைச்சின் வைத்திய விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கமல் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மருந்துப் பொருட்கள் விரைவில் வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை மேலும் ஒரு தொகை மருந்துப் பொருட்கள் கப்பல் மூலமாக கடந்த திங்கட்கிழமை நாட்டிற்கு கொண்டு வரப்பட்டமை தெரிந்ததே. (6-4)


# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை



நயினாதீவு நாகபூசணி அம்மன் மகோற்சவத்தை ஒட்டி "வலம்புரி" வருடந்தோறும் வெளியிடும் "நயினை நாகபூசணி அம்மன் பாமாலை" பகுதிக்கு கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் கவிதைகளை நயினை நாகபூசணி அம்மன் பாமாலை வலம்புரி 3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி ,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

குறிப்பு:- கவிதைகள் எட்டு வரிக்கு மேற்படாமல் அமைவது சிறப்பானது.


# 11.06.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1774 - அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜீயேர்சில் இருந்து பிரெஞ்சு இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி யூதர்கள் அங்கிருந்து வெளியேறினர்.
- 1788 - ரஷ்ய நாடுகாண் பயணி கெராசிம் இஸ்மாயிலொவ் அலாஸ்காவை அடைந்தார்.
- 1805 - மிச்சிகனில் டிட்ராயிட் நகரத்தின் பெரும்பகுதி தீயில் அழிந்தது.
- 1837 - பொஸ்டனில் ஆங்கிலேயர்களுக்கும் ஐரிய மக்களுக்கும் இடையில் கலவரம் மூண்டது.
- 1901 - நியூசிலாந்து தன்னுடன் குக் தீவுகளை இணைத்துக் கொண்டது.
- 1935 - அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரான எட்வின் ஆர்ம்ஸ்ட்ரோங் உலகின் முதலாவது தனது பண்பலை ஒலிபரப்பை நியூ ஜேர்சியில் அறிமுகப்படுத்தினார்.
- 1937 - சோவியத் ஒன்றியத்தில் எட்டு இராணுவத் தலைவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1938 - இரண்டாம் சீன ஜப்பானியப் போர்: ஜப்பானியப் படைகள் எதிர்கொள்ள சீன அரசு மஞ்சள் ஆற்றை பெருக்கெடுக்க விட்டதில் 5 இலட்சம் முதல் 9 இலட்சம் வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 1940. - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானங்கள் இத்தாலியில் ஜெனோவா மற்றும் டூரின் நகர்கள் மீது குண்டுகளை வீசின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: மால்ட்டா மீது முதற் தடவையாக இத்தாலிய விமானங்கள் தாக்குதலை நடத்தின.
- 1963 - தெற்கு வியட்நாமில் மத விடுதலையை வலியுறுத்தி திக் குவாங் டுக் என்ற பௌத்த மதகுரு தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.
- 1981 - ஈரானில் 6.9 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 2 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.
- 2004 - நாசாவின் கசீனி - ஹியூஜென்ஸ் விண்ணுளவி சனிக் கோளின் ஃபீபி துணைக்கோளை அண்டிச் சென்றது.
- 2007 - கடும் மழை வெள்ளம் காரணமாக பங்களாதேஷில் 118 பேரும் தெற்கு சீனாவில் 66 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1838 - எம்.சி.சித்திலெப்பை, ஈழத்துத் தமிழறிஞர்.
- 1908 - சோ. இளமுருகனார்., ஈழத்துப் புலவர்.
- 1947 - லாலு பிரசாத் யாதவ், இந்திய அரசியல்வாதி.
- 1957 - சுகுமாரன், தமிழகக் கவிஞர்.

### இறப்புகள்

- 1994 - அ.துரைராசா, பேராசிரியர், நாட்டுப்பற்றாளர், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.
- 1995 - பாவலரேறு, பெருஞ்சித்திரனார், தமிழறிஞர்.
- 1993 - லெப்டினண்ட் கேணல் சாள்ஸ், கடற்புலிகளின் தாக்குதற் படைத் தளபதியான ஆனந்தராசா தவராஜா ஆகியோர் கிளாலிக் கடலில் மக்களின் பாதுகாப்புப் பணியில் இருந்தவேளை நடந்த கடற்போரில் வீரச்சாவடைந்தனர்.



வரலாற்றில் புதிய திருப்பம் :- அன்டோனியோ மெயூச்சி என்பவரே தொலைபேசியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் என ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசினால் 2002 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டார்.

# நவீன எண் ஜோதிடம்

9

அமெரிக்கா விஞ்ஞானத்தில் வானைக் குடாவி விண்ணில் நிலவில் கொடியேற்றியது. ரஷ்யா அண்டவெளிகளில் ஆய்வுகளை அறிந்து தன் நிலத்தின் வளத்தினைப் புரிந்து எரிவாயுவினைப் பெற்று ஐரோப்பாக் கண்டம் முழுவதற்குமே விளக்கேற்றுகின்றது. ஏனைய பல தேசங்களும் கண்டங்களும் அப்படித்தான், இப்படித்தான். இதற்காக பிரிட்டிஸ் சாம்ராஜ்யம் என்று பெயர் வாங்கிக்கொண்டது எங்கும் பணிந்துபோகவில்லை. ஏனைய நாடுகள் தோலோடு சேர்த்து தோழமை கொண்டு துணைதேடி தம் பலத்தின் பக்கபலமாக அரவணைத்துக் கொண்டதே அன்றி எவையும் கிரேற் என்று பெயர் பெற்ற பிரிட்டனை எதிர்த்து நிற்கமுடியவில்லை. அதன் செய்கை, நடைமுறை என்றும் கிரேற் ஆகவே இருக்கின்றது.

இந்த கிரேற் என்ற சொல்லு தகைமையில் உயர்தரம், பிரிட்டன் என்ற சொல்லு பிரதிபலிப்புத் தன்மை என்ற சொல்லின் அர்த்தங்களின் மகிமைகளை, மகிமைக ளின் ஒலிகளை எந்தப் பலம் பொருந்திய நாடுகளாலும் அடித்து நூர்த்துவிட முடியவில்லை.

இதுதான் பெயரின் இரகசியம். 26 எழுத்தைக் கொண்ட அந்த நாடு எதற்கும் ஈடு இணை இல்லா தனிவளம் கொண்ட நாட்டின் தகைமையில் இருந்து இதுவரை தஞ்சக் கேட்டிற்கு இறங்கி பஞ்சம் பாடியதுமில்லை. பஞ்சம் திணித்ததும் இல்லை.

இந்த நாடு எந்த வகையிலும் நான்கு வகை சக்தி பொருந்தியிருக்கின்றது. நான்கும் தெரிந்தவன் மனிதன் என்பது போல, நால்வகைப் பெயரை இந் நாடு கொண்டுள்ளது. இதனால் நால்வகை நாடுகளிலும் இருந்து நாள்தோறும் படிப்பிற்கும் , தொழிலுக்கும் வாழ்விற்கும் என்று தேடி வந்தவரை இன்றுவரை போ என்று சலித்து நிறுத்தி புறங்காட்டி நின்றதில்லை. அது அந்த நாட்டின் நால்வகைப் பெயரின் சக்தி ஆகும்.

UK என்பது அதன் ஒரு பெயர். அதன் விடை UK என்று அழைத்தால் அது ஓகே என்று சொல்லுவது. England என்பது காயாத மையை உடைய பேனா போன்று பனி உதிராத வெள்ளை பூத்த மலைபோன்ற வெள்ளையர் நாடு என்றதன்மையில் E என்ற எழுத்து ஆங்கில மொழியில் அநேகமாக உயர்ந்த கருத்துகளை உருவாக்கித் தருவது.

பூமியின் பெயரும் Earth, Every where என்பது ஒளிகொடுக்கும் திசையும் East அதாவது பறவைக் கூட்டங்களில் Egle என்ற இனம் வலிமை உடையது. அதுகூட E என்ற எழுத்தில் தொடங்குவது பெயரின் மதிப்பே. இந்த ஈகிள் என்ற பறவை E என்ற எழுத்து முதலில் இருப்பதனால் அமெரிக்கர்கள் தமது அரச அடையாள பொறிச் சின்னத்தில் முதற் சின்னமாக வைத்திருக்கின்றார்கள்.

ஏனைய ஐரோப்பா நாடுகளிலும் கவுன்சில்களின் ஆட்சி அடையாளச் சின்னமாக இந்த E என்ற எழுத்துடைய ஈகிள் என்ற பறவைச் சின்னத்தையே வைத்திருக்கின்றார்கள். இங்லாண்ட் குழந்தையின் உதட்டில் சிறு வயதில் இருந்தே பெற்ற தாய் முத்தமிடுவது மேற்கத்தைய நாட்டவர் சமூகத்தின் தாய்ப் பாசம் ஆகும். இது தாய்மையின் பாசத்தை பாசத்தின் ஈரத்தைக் காயவிடாது.

எந்த ஒரு ஆய்விலும் விண்ணைக் குடைந்து அண்டங்களைப் பிளந்து, அணுவை ஆயுதமாக தோண்டி கண்டுபிடிக்கும் ஊசி முனை கூட, ஊசி முனையில் அடங்கும் நுட்பத்தின் இரகசியங்கள் கூட இந்த ஆங்கில மொழியின் வாயிலாகவே உலக மக்கள் காதிற்கு முதல் மொழியாக வருகின்றது. இதை மீறியதான எந்த மொழியிலும் வந்த அபூர்வ அர்த்தங்களை இதுவரை உலகம் ஏற்றதாகவும் இல்லை. இத்தனை தகைமையும் பெருமையும் மகிமையும் அளவில்லா அற்புதங்களும் கொண்ட உள்ளடங்கிய வல்லமை எதிலும் கண்ட தன்னிகரில்லா தனிப்பெரும் உலக முது மொழியாக நிமிர்ந்து நிற்பதன் காரணம் எதனிடமும் தஞ்சம் கேட்டு அரவணை தேடி அண்டி அணைத்து வாழும் தயவை இன்று வரை கொண்டதில்லை. இது அத்தனையும் அந்த நாட்டு மொழியின் வல்லமையே, எழுத்தின் வல்லமையே, ஓசை சத்தத்தின் காந்த ஈர்ப்பு விசைகளின் ஈர்ப்பால் பெற்ற ஆதிக்க சக்தியின் அபூர்வ திறமையே.

இந்த ஆங்கில நாட்டிலுள்ள நான்கு பெயர்களிலும் உள்ள உள்ளார்ந்த அர்த்த முள்ள மந்திரங்கள் ஆகும். இன்றும் வழி நடத்திக் கொண்டிருக்கின்றது.

வாசகர்கள் சலிக்காது சிரமம் கொள்ளாது சிந்தையுடன் வலம்புரி சங்கின் திறமை போன்று அறிந்து உங்கள் வலம் வைத்து வாசிப்பீர்கள். ஆனால் இங்கு காணமுடியாத நிலாவறையின் ஆழத்தை பிற ஆழமான அர்த்தங்களை உங்கள் அருகிற்கு திரை விருந்தாக அல்ல, ஏட்டுச் சுரக்காய் ஆக அல்ல,

எண் ஜோதிட நிபுணர்
**பேராசிரியர் ராஜராயேந்திரன்**

எங்குமே எழுதி மையினில் நனைத்து பேப்பரில் அழியாத அரிய அரிச்சுவடுகளும் அர்த்தங்களும் கொண்ட அற்புதப் புதையலை விருந்திற்கு விருந்தாகவும் மருந்து தேடியவர்க்கு மருந்தாகவும், ஆன்மீகம் வேண்டியோருக்கு அருளாகவும் அனுபவம் வேண்டியோருக்கு ஆல்போல் விருட்சமாகவும் புதுமை விரும்புவோர்களுக்கு மூங்கில் சோலையாகவும் கரைதட்ட முடியாத ஆழ அற்புதத்தை வலம்புரி வழங்குகின்றது என்பதை வாசகர்கள் கருத்திற்கொள்ளவும். (தொடரும்)

## பொதுநலவாய மாநாட்டில் சரத்பொன்சேகா பங்கேற்பு

(கொழும்பு)

கென்யாவில் இந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை பிரதிநிதிகளில் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பெயரும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் குழு கூட்டம் சபாநாயகர் ஷமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. மாநாட்டில் கலந்துகொள்வதற்கு ஆளும் கட்சியின் சார்பில் இருவரும், எதிர்க்கட்சிகள் சார்பில் இருவரையும் தெரிவு செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் குணசேகரவும் ஜனநாயக தேசியக் கூட்ட ணியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் தெரிவு செய்வதென யோசனை முன்வைக்கப்பட்டது.

இதனை சபாநாயகரும் ஏற்றுக் கொண்டுள்ளார். எதிர்வரும் செம்டெம்பர் மாதம் சரத் பொன்சேகா கென்யா செல்லவுள்ளார். ஜெனரல் சரத் பொன்சேகா தற்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் , இராணுவப் பாதுகாப்புடனேயே நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்கிறார். (ந-5)

## முகாம்களிலுள்ள சிறார்களுக்கு போசாக்கு குறைபாடு

(கொழும்பு)

வவுனியா இடம்பெயர் முகாம்களில் வசித்து வரும் ஐந்து வயதிற்கும் குறைவான சிறார்களில் 88.3 வீதமானோர் பல்வேறு போசாக்குக் குறைபாட்டுடன் இருப்பதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிருவனத்தின் போசாக்குத் திணைக்களம் வெளியிட்டுள்ள 2009 ஆம் ஆண்டுக்கான புதிய ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதில் 25வீதமான சிறார்கள் சாதாரண போசாக்குக் குறைபாட்டில் இருப்பதுடன் , 5.2 வீதமானவர்கள் பெரும் போசாக்குக் குறைபாட்டுடன் உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான பயிற்சிகள்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக செல்லும் ஆண் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்க , வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்லும் பணியாளர்களுக்கு அரபு மொழியை அடிப்படையாகக் கொண்டு இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

முதல் தடவையாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வோர் மொழி , கலாசாரம், சட்டம் என்பவை தெரியாத காரணத்தால் சிரமங்களை எதிர்நோக்குவதாக பணியகத் தலைவர் கூறியுள்ளார்.

இதற்காகவே , அவர்களுக்கு அரபு மொழிப் பயிற்சி வழங்கப்படுவதாகவும் எதிர் காலத்தில் இதனைக் கட்டாயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (6-4)

## வடபகுதியில் 21ஆயிரம் சிங்களவர்கள் முதற்கட்டமாக குடியமர்த்தப்படுவார்கள்

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

வடபகுதியில் இருந்து வெளியேறிய 21 ஆயிரம் சிங்களவர்களும் 60 ஆயிரம் முஸ்லிம் மக்களும் முதற்கட்டமாக அங்கு குடியமர்த்தப்படுவார்கள் எனவும் அதற்கு ஏதுவாக அடுத்த வருடம் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படும் எனவும் மின்சார மற்றும் சக்தி வலுத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் குடிசன மதிப்பீடு அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ளது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடபகுதியில் இருந்து வெளியேறிய 21 ஆயிரம் சிங்களவர்களும் 60ஆயிரம் முஸ்லிம் மக்களும் முதற்கட்டமாக அங்கு குடியமர்த்தப்படுவதற்கு ஏதுவாக இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

தேர்தல் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். 12 ஆயிரம் வாக்குகளை பெற்ற கட்சிகள் நாடாளுமன்றத்தில் 14 ஆசனங்களை கொண்டுள்ளன. ஆனால் அவர்களை விட அதிக வாக்குகளை பெற்ற தென்னிலங்கை கட்சிகள் குறைந்த ஆசனங்களையே கொண்டுள்ளன.

மேற்குலக நாடுகளினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை அரசு தோற்கடிக்கும். நாம் அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## அரசாங்க செய்தி பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளரும் "தெசத்திய" சஞ்சிகையின் ஆசிரியருமான வசந்தப் பிரிய ராமநாயக்க அரசாங்க தகவல் திணைக்களத்தின் செய்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

"பெரமக" சஞ்சிகையின் முன்னாள் உதவி ஆசிரியரான இவர் , கடந்த 16 வருடங்களாக "தெசத்திய" சஞ்சிகையின் ஆசிரியராக கடமையாற்றி வந்தார் .செய்திப் பணிப்பாளர் பதவியை வகிக்கும் அதேவேளையில் "தெசத்திய" சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-4)

## வரவு செலவுத்திட்டம் மீதான விவாதம்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் குறித்த விவாதமானது தினம் தோறும் காலை 9 மணிமுதல் இரவு 9 மணி வரையான 12 மணித்தியாலங்கள் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு அரசாங்கத்தினால் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

12மணிநேரம் தொடர்ந்து நடைபெறும் வரவு செலவுத் திட்டம் மீதான இந்த விவாதமானது வாக்கெடுப்புடன் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
# கொழும்பு வணிகவள நிலையம்

## முன்னோடிப் பரீட்சை க.பொ.த.உயர் தரம்-2010

வணிகப் புள்ளிவிபரவியல் - II நேரம் : 3 மணி

### பகுதி - I

- பகுதி (I) இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி (II) இலிருந்து நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

(1)பின்வரும் கூற்றுக்கள் மெய்யானவையா அல்லது பொய்யானவையா எனக்குறிப்பிட்டு நியாயம் தருக.

(அ)குடியொன்றிலுள்ள அலகுகள் வேறுபட்டு காணப்படும் போது அடுக்கமைவுமாதிரி எடுப்பாய்வு பொருத்தமானது.

(ஆ) மாதிரிச்சட்டம் இல்லாத நிலையில் சொத்து மாதிரியெடுத்தல் சிறந்த முறையல்ல.

(இ) முறையான மாதிரி எடுப்பாய்வை நிகழ்தகவு சாராமாதிரி எடுப்பாய்வாக கருதுவதற்கு முதலாவது அலகை தவிர ஏனையவை எழுமாற்றாக தெரிவு செய்யப்படுவதில்லை.

(ஈ)எழுமாற்று இலக்க அட்டவணை என்பது குடியிலுள்ள அலகுகளை ஒழுங்குபடுத்தி அவற்றுக்கு வழங்கப்பட்டஎண் பட்டியலாகும்.

(2)பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

(அ) முடிவுள்ள குடியிலிருந்து மீள் வைப்பின்ற n பருமன் கொண்ட மாதிரிகளைத் தெரிவுசெய்து மாதிரியிடைகளின் மாதிரியெடுத்தல் பரம்பலை அமைக்கும் போது அபபரம்பலின் இடை, மாறற்றிறன் ஆகியவை பின்வருமாறு அறியலாம்.

(1) $\mu, \sigma^2$ (2) $\mu, \frac{\sigma^2}{n}$ (3) $\mu, \frac{\sigma^2}{n}\left(\frac{N-n}{N-1}\right)$ (4) $\mu, \frac{\sigma}{n}\left(\frac{N-n}{N-1}\right)$

(ஆ) இரண்டு மாதிரிகளின் பருமன்கள் முறையே $n_1, n_2$ ஆகவும் அவற்றின் குறித்த சிறப்பியல்பு கொண்ட அலகுகளின் எண்ணிக்கை குறித்த சிறப்பியல்பு கொண்ட அலகுகளின் எண்ணிக்கை $x_1, x_2$ ஆகவும் காணப்படுகின்றது எனின் குடியின் சிறந்த மதிப்பானை எவ்வாறு மதிப்பிடலாம்.

(1) $P_1 = \frac{x_1}{n_1}$ (2) $P_2 = \frac{x_2}{n_2}$ (3) $P_1 + P_2$ (4) $P = \frac{x_1 + x_2}{n_1 + n_2}$

(இ)மாதிரியின் பருமன் சிறிதாகவுள்ள மாறற்றிறன் அறியப்பட்ட செவ்வன் குடியொன்றின் நம்பிக்கை எல்லைகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான சூத்திரம்

(1) $\bar{x} \pm Ze\frac{\sigma}{\sqrt{n}}$ (2) $\bar{x} \pm t(n-1)\frac{S}{\sqrt{n}}$

(3) $\bar{x} \pm t(n-1)\frac{\sigma}{\sqrt{n}}$ (4) $\bar{x} \pm Ze\frac{S}{\sqrt{n}}$

(ஈ)குடியொன்று குறித்த சிறப்பியல்பு அலகுகளை கொண்வாறு அமைந்திருக்குமாயின் அதிலிருந்து பெறப்பட வேண்டிய மாதிரி அளவு

(1)பெரிய மாதிரியாக இருக்க வேண்டும்.
(2)30 ஐ விட அதிகமாக இருக்க வேண்டும்.
(3)ஒரு ஒற்றை உருப்படியாக இருக்க வேண்டும்.
(4)30 ஐ விட குறைவாக இருக்க வேண்டும்.

(3)கீழ்வரும் இடைவெளிக்கு பொருத்தமான பதங்களையிட்டு பூரணப்படுத்துக.

(1)தரவுகள் ஒரு அனுமானிக்கப்பட்ட பரம்பலைப் பின்பற்றுகின்றனவா இல்லையா என்பதனை சோதிப்பதற்குரிய ஒருசோதனை .................................................. ஆகும்.

(2)மாதிரித் தெரிவு .................................................. காரணமாகவே மாதிரியெடுத்தல் வழுக்கள் ஏற்படலாம்.

(3)நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது ஒரு சராசரியான குடியின் அனுபவபூர்வ .................................................. பற்றிக் கூறுகிறது.

(4)ஒரு சிறந்த மதிப்பான் குறித்து நிறபது ஒரு மதிப்பானது பரம்பலின் உண்மையான பரிமானத்தைச் சுற்றி .................................................. இருக்கும்.

(4)பின்வரும் கூற்றுக்களுள் ஒவ்வொன்றும் உண்மையானவையா அல்லது பொய்யானவையா என்பதைக் கூறி சுருக்கமாக உங்கள் நியாயத்தை எடுத்துரைக்க.

(1) இசைவான மதிபான்கள் அனைத்தும் கோடாத மதிப்பான்கள் ஆகும்.

(2) விலைச்சுட்டெண்ணின் இடையைக் கணிப்பதற்கு பெருக்கலிடை பொருத்தமான அளவீடாகும்.

(3) லாஸ்பெயர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையாக அமைவது அடியாண்டின் விலை அளவீடாகும்.

(4) உள்நாட்டு உற்பத்தி சுருக்கி நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்தியை நடபபு விலைகளின் மொத்த தேசிய உற்பத்தியினால் வகுப்பதன் மூலம் பெறப்படுவதாகும்.

(5)பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைத் தெளிவாக எழுதுக.

(1) 2, 3, 4, 5 ஆகிய எண்களைக் கொண்டதாகக் கருதப்படும் குடியொன்றிலிருந்து பருமன் 2 உள்ள மாதிரிகளைப் பிரதிவைப்பின்ற தெரிவு செய்யக்கூடிய வழிகளின் எண்ணிக்கை

(1) ${}^4C_2$ (2) ${}^4P_4$ (3) ${}^4P_2$ (4) ${}^4C_4$

(2) எளிய எழுமாற்று மாதிரிக்கப் பிரயோகிக்கப்படாத முறை

(1) சீட்டிழுப்பு முறை (2) தொடர்பு ஒழுங்குமுறை
(3) எழுமாற்று இலக்க அட்டவணை முறை (4) கணனி முறை

(3) ஒழு வழி மாறற்றிறன் பகுப்பாய்விற்கு பொருத்தமான சோதனைப் புள்ளிவிபரம

(1) $F = \frac{\text{மாதிரிகளின் இடை}}{\text{மாதிரிகளுக் குள்இடை}}$

(2) $F = \frac{\text{மாதிரிகளின்மாறற்றிறன்}}{\text{மாதிரிகளுக்குள் மாறற்றிறன்}}$

(3) $F = \frac{\text{மாதிரிகளுக்கிடையிலான இடை}}{\text{மாதிரிகளுக்கான மாறற்றிறன்}}$

4) $F = \frac{\text{மாதிரிகளுக்கிடையிலான மாறற்றிறன்}}{\text{மாதிரிகளுக்குள்ளான மாறற்றிறன்}}$

(4) ஒரு வழி மாறற்றின் பகுப்பாய்வில் சூனியக் கருதுகோள் பின்வருவனவற்றுள் எது?

(1) $\overline{X}_1 = \overline{X}_2 \ldots\ldots\ldots\ldots \overline{X}n$ (2) $\mu_1 = \mu_2 \ldots\ldots\ldots\ldots \mu_0$

(3) $\mu_1{}^2 = \sigma^2{}_2 \ldots\ldots\ldots\ldots \sigma^2{}_n$ (4) $S^2{}_1 = S^2{}_2 = \ldots\ldots\ldots\ldots S^2{}_n$

(6 )இடைவெளிகளை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான பதம்/ பதங்கள் / சொற்றொடர்களை எழுதுக.

(அ).................................................. தரப்படாத நிலையில் கொத்து மாதிரியெடுத்தல் ஒரு சிறந்த மாதிரியெடுத்தல் நுட்பமாகும்.

(ஆ) ஒரு நிலைய்ான நம்பிக்கை குணகம் $(1 - \alpha)$ க்கு பரமானம் $\theta$ க்குரிய, மிக விரும்பத்தக்க நம்பிக்கையாயிடையானது .................................................. ஆகிய அகலத்தைக் கொண்ட ஒன்று ஆகும்.

(இ) $N(\mu, \sigma^2)$ என்ற ஒரு குடியிலிருந்து n அளவு கொண்ட எழுமாற்று மாதிரி ஒன்று எடுக்கப்பட்டிருக்குமாயின், மாதிரி இடையத்துடன் ஒப்பிடும் போது மாதிரி .................................................. ஆனது அதிக திறனுடையதாகும்.

(ஈ) இரு மதிப்பான்களில் சிறிய மாறற்றிறன் கூடிய ஒரு மதிப்பான் .................................................. மதிப்பான என அழைக்கப்படும்.

(7) கல்லூரி ஒன்றிலுள்ள மாணவர்களின் நிறையானது 60kg இடையையும் 5kg நிமயவிலகலையும் உடைய செவ்வன் பரம்பலை அனுசரித்துள்ளது. 4 மாணவர்களை எழுமாற்றாகத் தெரிவு செய்த போது அவர்களின் சராசரி நிறை 65kg ஐ விட குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(8) குடும்பம் ஒன்றின் மூன்று பொருட்களிலான செலவீடுகள 2 : 5: 3 எனும் விகிதாசாரத்தில் காணப்படுகின்றன. இப்பண்டங்களுக்கான விலை முறையே 30 சதவீதம் 20 சதவீதம் மற்றம் 40 சதவீதத்தால் உயர்கிறது. மொத்தச் செவீடு என்ன சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(9) $n = 13, \Sigma x = 24, \Sigma(x - \bar{x})^2 = 48$ ஆகவுள்ள ஒரு மாதிரித்தொகுதியிலிருந்து குடியின் இடை, மாறல்திறன் என்பவற்றை மதிப்பிடுக.

(10) குறித்த மின்கலம் ஒன்றில் சராசரி ஆயுட்காலமானது பல மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு 1500 மணித்தியாலங்கள் எனக் கணிப்பிடப்பட்டது. நியம விலகல் 180 மணித்தியாலங்கள் என ஏற்கனவே அறியப்பட்டது. இடைக்குரிய கட்டுப்பாட்டு எல்லைகளை மாதிரியின் பருமன் 9 எனக் கொண்டு கணிக்குக.

## பகுதி - II

(இப்பகுதியிலிருந்து ஏதாவது நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக. ஒவ்வொரு வினாவும் II புள்ளிகளைக் கொண்டுள்ளது)

(11) (அ)முறைமை மாதிரியெடுத்தல் முறையினை விளக்குக.

(3 புள்ளிகள்)

(ஆ) முறைமை மாதிரியெடுத்தலின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் யாவை?

(3 புள்ளிகள்)

(இ) முறைமை மாதிரியெடுத்தலானது சாதாரண எழுமாற்று மாதிரியெடுத்தலினை விடவும் சிறப்பானதா? விளக்குக.

(3 புள்ளிகள்)

(ஈ) கீழுள்ள அட்டவணையானது ஒரு இலக்கிடப்பட்ட குடியினைப் பிரதிபலிக்கிறது.

| பெயர் | பால் | வயது |
|---|---|---|
| அனுரா | ஆண் | 23 |
| பாலா | ஆண் | 37 |
| ராதா | பெண் | 47 |
| சார்ல்ஸ் | ஆண் | 36 |
| சுவர்ணா | பெண் | 41 |
| சரத் | ஆண் | 36 |
| ஹலீம் | ஆண் | 38 |
| சமந்தி | பெண். | 37 |
| ஏரன்டா | ஆண் | 48ஷ |

(1) எழுமாற்று இலக்கங்கள் 2, 9, 4, 3, 6, 7 என்பவற்றைப் பயன்படுத்தி, 6 பருமன கொண்ட ஒரு சாதாரண எழுமாற்று மாதிரியினைத் தெரிவு செய்க. உமது மாதிரியினது சராசரி வயது யாது?

(2) குடியினைப் பால் அடிப்படையில் படையாக்கியும் பருமனுக்கு நிகழ்தகவு விகிதாசாரத்தினைப் பயன்படுத்தியும் எவ்வாறு 6 பருமன் கொண்ட ஒரு படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரி எடுக்கப்பட முடியும் என விளக்குக.

(3) 3 அளவு கொண்ட ஒரு முறைமை மாதிரியானது வேண்டப்பட்டால் முதலாவது ஆளாகத் தெரிவு செய்யப்படுபவர் பாலா ஆக இருப்பின் ஏனைய இருவரும் யாராக இருப்பர்?

(6 புள்ளிகள்)

(12)(1) மையவெல்லைத் தோற்றத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(2) மாதிரி இடைகள் இரண்டின் ஆயிடையின் மாதிரியெடுத்தற் பரம்பலின் இடையையும் மாறற் திறனையும் பற்றி யாது கூறுவீர்?

(3) ஒரு நிறுவனம் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உதிரிப்பாகங்களை இரண்டு வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்தது. முதலாவது நபர் வழங்கும் உதிரிப்பாகங்கள் 0.08 விகிதமும் இரண்டாம் நபர் வழங்கும் உதிரிப்பாகங்களும் 0.05 விகிதமும் நிராகதிக்கப்படுவதாக அறியப்பட்டது. குறித்த ஒரு நாளில் உற்பத்திக்காக முதலாவது வழங்குநரிடமிருந்து பெற்ற 150 உதிரிப்பாகங்களும், இரண்டாவது வழங்குநரிடமிருந்து பெறற 300 உறுதிப்பாகங்களும் பயன்படுத்தப்பட்டன. உதிரிப்பாகங்கள் நிராகரிக்கப்படும் வகிதங்களின் ஆயிடை 1%க்கு குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

(4)வீடமைப்புத் திட்டமென்றில் வாழுகின்ற 20 குடியிருப்பாளர்களிடம் அவர்களது மாதாந்தக் கொடுப்பனவுகள் பற்றிய ஆய்வொன்றின் போது அவர்கள் மாதாந்தம் செலுத்தும் பணத்தின் இடை 200% ஆகவும் நியம விலகல்60% ஆகவும் இருந்தமை அறியப்பட்டது. முழு வீடமைப்புத் திட்டத்திலும் வாழுகின்ற குடியிருப்பாளர்களதும் மாதாந்தக் கொடுப்பனவுக்கான 98% பொருள் எல்லைகளை அமைக்குக.

(13 (1)புள்ளிவிபர மதிப்பீடு என்றால் என்ன என்பதை வரையறுத்து அதன் முக்கியத்துவத்தைக குறிப்பிடுக.

(2) சிறந்த புள்ளிமதிப்பின் ஒன்றின் கோடாத்தன்மை, வினைத்திறன் ஆகியவற்றை வரையறுத்து விளக்குக.

(3) புள்ளி மதிப்பீட்டிற்கும் ஆயிடை மதிப்பீட்டிற்கும் இடையிலான வேறுபாட்டினை எடுத்துக்காட்டுக.

(4) 1. $X \sim N(55, 20), Y \sim N(40,15)$ ஆகிய குடிகளிலிருந்து முறையே 15, 9 பருமன்களுடைய மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டால் அவற்றின் இடைகள் $\bar{x}, \bar{y}$ ஆயின் அவ்விரு பரம்பல்களையும் வரையறை செய்க.

2. $x,y$ சாராதவையாயின் $(\bar{x}-\bar{y})$ இற்கான பரம்பலை எழுதுக.

(4 புள்ளிகள்)

(14) (1) புள்ளிவிபர கருதுகோள் சோதனையின் வலிமை என்றால் என்ன?

(2 புள்ளிகள்)

(2)குடித்தொகை விகிதங்கள் இரண்டின் வித்தியாசத்துக்கான கருதுகோளைச் சோதிப்பதற்கான புள்ளிவிபரத்தை வரையறுக்க.

(3 புள்ளிகள்)

(3) புதிய சலவைச்சவர்க்காரத்தூள் வகையொன்றின் நுகர்வு தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வொன்றின் போது கொழும்பு மாவட்டக் குடும்பத் தலைவியர் 1000 பேருள் 260 பேர் அதனைப் பயன்படுத்துகின்றமையும், கண்டி மாவட்ட குடும்பத்தலைவியர் 500 பேருள் 100 பேர் அதனைப் பயன்படுத்துகின்றமையும் தெரிய வந்தது. கண்டி மாவட்டக் குடும்பத் தலைவியர்களை விட கொழும்பு மாவட்டக் குடும்பத்தலைவியருள் கூடுதலான விகிதத்தினர் இப்புதிய சலவைத்தூள் வகையைப் பயன்பத்துகின்றனர் எனும் முடிவை 95% நம்பிக்கை மட்டத்தில் சோதிக்குக.

(10 புள்ளிகள்)

(15) (1) நிறைமிடப்பட்ட திரள்சுட்டி என்பதை வரையறுக்க.

(2 புள்ளிகள்)

(2) குறித்த குடும்பம் ஒன்று தெரிவு செய்த 4 வகையான பொருட்கள் மீது அவர்கள் இரு ஆண்களில் மேற்கொண்ட செலவுகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. பொருட்களின் விலை மாற்றங்களைக் காட்டக்கூடியவாறு "லாஸ்பெயர்" விலைச்சுட்டெண்ணைத் தயாரிக்க. (1995ம் ஆண்டை அடியாண்டாகக் கொள்க)

| பொருள் வகை | 1995 | | 1996 | |
|---|---|---|---|---|
| | விலை | பெறுமானம் | விலை | பெறுமானம் |
| சீனி | 20 | 800 | 30 | 1350 |
| அரிசி | 30 | 1500 | 20 | 1200 |
| மா | 15 | 300 | 20 | 500 |
| மிளகாய் | 10 | 300 | 15 | 525 |

(3)உலோகப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று அது உற்பத்தி செய்யக்கூடிய மூலை உலோகங்களின் அளவுகள் கீழே அட்டவணை மூலம் தரப்பட்டுள்ளது.

| | விலை ரூபா | | | அளவு | | |
|---|---|---|---|---|---|---|
| உலோகங்கள் | 1998 | 1989 | 1990 | 1988 | 1989 | 1990 |
| செம்பு 1kg | 24 | 37 | 30 | 1025 | 1100 | 1200 |
| பித்தளை 1kg | 15 | 14 | 10 | 470 | 490 | 380 |
| இரும்பு 1kg | 10 | 12 | 11 | 905 | 560 | 800 |

1988ஆம் ஆண்டை அடியாண்டாகவும் 1989ம் ஆண்டை வகைப் பருவகாலமாகவும கொண்டு வகைப்பருவ விலைச்சுட்டெண்ணையும், வகைப்பருவ கணியச் சுட்டெண்ணையும் மதிப்பிடுக.

(6 புள்ளிகள்)

(4) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் முக்கியத்துவத்தையும் குறைபாடுகளையும் குறிப்பிடுக.

(16) (அ) காலத்தொடர் என்பதனால் நீங்கள் கருதுவது யாது? வணிகப்பகுப்பாய்வில் காலத்தொடரின் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(5 புள்ளிகள்)

(ஆ)போக்கினை மதிப்பிடும் பல்வேறு முறைகளையும் பெயரிடுக. அவற்றுள் சிறந்தது எது என நீங்கள் கருதுவீர்கள்? விளக்குக.

(5 புள்ளிகள்)

(இ) கீழ்வரும் தரவுகளுக்குரிய இழிவு வர்க்க முறை மூலமான ஒரு நேர்கோட்டுப் போக்குக் கோட்டினை அமைப்பதுடன் 2005 ஆம் ஆண்டுக்கான உற்பத்தியினை மதிப்பீடு செய்க.

| ஆண்டு | 1996 | 1997 | 1998 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| உற்பத்தி தொன்களில் 000 | 75 | 85 | 110 | 135 | 150 |

(5 புள்ளிகள்)

(17) (அ)புள்ளிவிபரவியல் தரக்கட்டுப்பாட்டின் நன்மைகள் யாவை?

(3 புள்ளிகள்)

(ஆ)மாதிரியெடுத்தற் பரிசோதனைத் திட்டங்களால் என்ன நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன? (3 புள்ளிகள்)

(இ)R - கோட்டுப்படங் (R - charts) களுடன் தொடர்பாக X கோட்டுப்படங் (X - charts)களின் நடத்தையினைஆராய்க.


(4 புள்ளிகள்)

(ஈ)$N=20$ அலகுகளைக் கொண்ட தொகுதியொன்றின் உள்வரும் தரமானது 10% பழுதுகளுடையனவாகும். 5அலகுகள் கொண்ட ஒரு எழுமாற்று மாதிரியில் எவ்வித பழுது அலகுகளும் இல்லாமல் இருக்குமாயின் அத்தொகுதி ஏற்றுக்கொள்ளப்படும். தொகுதியானது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிகழ்தகவு யாது?

(5 புள்ளிகள்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மீன்களின் அத்தியாவசிய கொழுப்பமிலங்கள்




கொழுப்பமிலங்கள் எனப்படுபவை நிரம்பிய அல்லது நிரம்பாத, கிளையற்ற, நீண்ட அலிபாட்டிக் வாலினையுடைய காபொக்சிலிக் அமிலமாகும். அதிகமாக காணப்படும் இயற்கையான கொழுப்பமிலங்கள் முழு எண்ணிக்கையான காபன் அணுக்களை கொண்டிருக்கும். கொழுப்பமிலங்கள் , கொழுப்பு அல்லது உயிரியலுக்குரிய எண்ணெயில் எசுத்தர் பிணைப்புக்கள் நீர்ப்பகுப்புக்குள்ளாவதால் உருவாக்கப்படும்.

இயற்கையான கொழுப்பமிலங்கள் பெதுவாக 4 தொடக்கம் 28 காபன் அணுக்களை கொண்டிருக்கும். மிகவும் எளியகுறுகிய சங்கிலி கொழுப்பமிலத்துக்கு உதாரணம்(Butyric acid) ஆகும். சில கொழுப்பமிலங்களின் முப்பரிமாண அமைப்பு படம்1



இல் காட்டப்பட்டுள்ளது.

மீன்களில் காணப்படும் கொழுப்பமிலங்களில் மிக அத்தியாவசிய கொழுப்பமிலங்கள் எனப்படுவன மனிதனால் தொடுக்கப்படாத ஆனால் கட்டாயமாக உடல் நலத் துக்கு உள்ளெடுக்கப்பட வேண்டிய கொழுப்பமிலங்கள் ஆகும். இவ் அத்தியாவசிய கொழுப்பமிலங்கள் நீண்ட சங்கிலியாலான (poly unsaturated) கொழுப்பமிலங்களாகும். இவற்றுக்கு உதாரணம் Omega3, Omega6, Omega9 கொழுப்பமிலங்களாகும். இவற்றுள் மிக முக்கியமானவை Omega3, Omega6 கொழுப்பமிலங்களாகும்.

Omega9 கொழுப்பமிலங்கள் அத்தியாவசியமென ஆராய்ச்சியாளரால் கூறப்படினும் இவை அத்தியவசியமற்ற கொழுப்பமிலங்களாகவும் கருதப்படுகிறது. காரணம் இவ் Omega9 கொழுப்பமிலங்கள் அத்தியாவசிய கொழுப்பமிலங்கள் அதாவது Omega3, Omega6 உடலில் காணப்படும் போது அவற்றிலிருந்து மனிதனால் தொகுக்கப்படக் கூடியன.

இக் கொழுப்பமிலங்களும் ஏனைய இலிப்பிட்டுக்களும் உணவாக உள்ளெடுக்கப்படும் போது சிறந்த சுவையைத்தர வல்லன. தற்போதைய கால கட்டத்தில் இக் கொழுப்பமிலங்கள் பற்றி ஒவ்வொரு கிழமையும் புதிய பெறுபேறுகள் கிடைக்கப்பெறுகின்றன. எனவே இவை தற்போது ஓர் முக்கியமான தலையங்கமாகத் திகழ்கின்றன. அடுத்து இக்கொழுப்பமிலங்கள் எவ்வாறு மனித உடற் தொழிற்பாட்டுக்கு உதவுகின்றன என நோக்குவோம். அத்தியாவசிய கொழுப்பமிலங்கள், குருதிக்கலன், இனப்பெருக்க, நிர்ப்பீடன, நரம்புத் தொகுதிகளுக்கு உறுதுணையாக திகழ்கின்றன. மனித உடலானது கலமென் சவ்வுகளை உற்பத்தி செய்யவும் , பழுது பார்ப்பதிலும் உதவுகின்றன. கலங்கள். அதிசிறந்த போசணைப் பொருட்களைப் பெறுவதற்கு உறு துணையாகத்திகழ்வதுடன் தீங்கான கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதிலும் உதவுகின்றன.

அத்தியாவசிய தொழுப்பமிலங்களின் பிரதான தொழிற்பாடு உடற்தொழிற் பாடுகளான இதயத்துடிப்பு வீதம், குருதிய முக்





கம், குருதியுறைதல், வளமான தன்மை போன்றவற்றைச் சீராக்கும் Prostagland ino ஐ உற்பத்தி செய்வதாகும். அத்துடன் உடலானது . தொற்றுதலுக்கெதிராகத் தொழிற்பட்டு நிர்ப்பீடன ஆற்றலை சீராக்கு வதற்கும் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை குழந்தைகளில் சீரான வளர்ச்சிக்கும் முக்கியமாக நரம்பு விருத்தி, புலன் தொகுதிகளின் விருத்தி என்பவற்றுக்கு அத்தியாவசியமானவை. முளையங்களும், தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளும் கூட தாயின் உடலிலிருந்து அத்தியாவசிய கொழுப்பமிலங்களை போதுமானளவு பெற்றுக் கொள்ள வேண்டியவையாகக் காணப்படுகின்றன.



Omega 6, Omega 3 கொழுப்பமிலங்கள் ஓர் குறிப்பிட்ட விகிதத்திலேயே உணவில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். அதாவது Omega 6 : Omega 3 ஆனது 1:1 முதல் 4:1 வரை வேறுபடலாம். எனவே நாம் எமதுணவில் Omega 6 கொழுப்பமிலங்களை குறைத்தல் அவசியம். இவ் Omega 6:Omega 3 சமனிலை பேணப்படாத விடத்து heart attack , cancer , acthma , depression , stroke,Obesity, diabetes,arthriks போன்ற நோய்கள் தோற்றுவிக்கப்படல் அதிகமாகின்றது.

அநேக அமெரிக்கர்கள் மிதமிஞ்சிய பதப்படுத்தப்பட்ட உணவை உட்கொள்வதால் அவர்களில் Omega 3 கொழுப்பமிலங்களின் பற்றாக்குறை ஏற்பட்டு depression தோற்றுவிக்கப்படுகிறது.

ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பின் படி Ice landers இல் ,heart attack வீதம் குறைவாகவும் , Omega 3 கொழுப்பமிலங்கள் கூடுதலாகவும் காணப்பட்டது. இங்கு Omega 3 கொழுப்பமிலங்கள் கூடுத லாக காணப்படல் அவர்கள் கூடியளவு மீன் உணவை உட்கொள்வதால் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதே நிலைமையே ஜப்பானியர்களிலும் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே Omega 3 கொழுப்பமிலங்கள் அதிகமாக காணட்டும் மீன் உணவுகளை உள்ளெடுத்து சுகதேகியாக வாழ்வோமாக.



கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன்
தலைவர், மீன்பிடியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 23

**நுண்கணிதத்தின் தந்தை எனப்படுபவர் யார்?**

**விடைகளை 23-06-2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 21க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திரு.கா.செல்வரத்தினம்
வீரபத்திர கோவிலடி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

**புதிர் 22 இற்கான விடை : John Forbes Nash**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 23

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
கையொப்பம் :..........................................

# ஈழத்தமிழர்கள் திரும்பவும் போர் தொடுப்பார்கள்

## சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் சொல்கிறார்



மஹிந்த ராஜபக்ஷ



லீ குவான் யூ

சிங்கப்பூரின் முன்னாள் பிரதமரும் தற்போதைய அரசவை ஆலோசகருமான லீ குவான் யூ, அந்நிய நாடுகளைப் பற்றி அதிகம் கருத்து சொல்லமாட்டார்! அத்தி பூத்த மாதிரி அவர் சொன்னால், அதை அத்தனை நாடுகளும் படு கவனமாக காதில் வாங்கிக் கொள்ளும்! உலக நாடுகள் அத்தனையும் உற்றுப் பார்க்கின்ற அளவுக்கு சிங்கப்பூரை சுப்பர் ஸ்பீடில் முன்னேற்றிக் காட்டிய இவரின் லேட்டஸ்ட் மன ஓட்டங்களைப்பற்றி "லீ குவான் யூவுடன் ஓர் உரையாடல்"என்று வெளியாகியுள்ள ஒரு சமீபத்து புத்தகம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறு விடயங்கள் குறித்து லீ குவான் யூவுடன் தான் பேசியதை ... டாம் ப்லேட் என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர் எழுதியுள்ளார். புத்தகத்தின் ஒரு பகுதி, இலங்கை அரசின் அராஜகங்களை அப்பட்டமாக சுட்டிக்காட்டுகிறது. சிங்கப்பூரின் பிதாமகன் உதிர்த்த வார்த்தைகள், ஈழத் தமிழர்களின் மரண ஓலங்களுக்கு மருந்து போடுவதாக இருக்கிறது. இனி புத்தகத்தில் இருந்து...

"இலங்கையில் போர் முடிந்து அமைதி நிலவுகிறது என்று எங்காவது படித்தால், சிரிப்புதான் வருகிறது. விடுதலைப்புலிகள் அமைப்பை இலங்கை இராணுவம் எதிர்த்து வென்றிருந்தாலும் இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்திருப்பது அநியாயம்! நான் ராஜபக்சவின் சில பிரசாரங்களையும் மேடைப் பேச்சுக்களையும் கேட்டிருக்கிறேன். அதை அலசிப் பார்க்கும் போது, அவரை ஒரு சிங்களத் தீவிரவாதி (எக்ஸ்ட்ரீமிஸ்ட்) என்றே கருதவேண்டியுள்ளது. அப்படிப்பட்டவரின் மனதை மாற்றுவது எளிதான காரியம் அல்ல.

மக்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் சுதந்திரம் அளிக்கப்படுகிறது என்பதால் மட்டுமே இலங்கையை ஒரு குடியரசு நாடு என்று கூறிவிட முடியாது. அந்த நாட்டில் வாழும் சிங்களவர்களுக்கு உரிமை இருக்கிற அதேஅளவு தமிழர்களுக்கும் தரப்பட வேண்டும். ஆனால்,

அந்த நாட்டு வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், அப்படி இல்லை. தமிழர்களுக்கு சிங்களர்களால் இழைக்கப்படும் கொடுமைகளைப் பார்த்தாலே இது புரியும்.

எனக்கென்னவோ, சிங்களவர்கள் தாழ்வு மனப்பான்மையால் தான் தமிழர்களை விரட்டுகின்றனர் என்று தோன்றுகிறது.

சிங்களவர்களை விட தமிழர்கள் அதிகச் செயல்திறன் கொண்டவர்கள். அப்படி ஒரு நிலையில், நானும் ஒரு தமிழனாக இருந்தால், அவர்களை எதிர்த்து இயல்பாகவே கொதித்து எழுந்திருப்பேன்!" என்று தமிழர்களின் குரலாக அந்தப் புத்தகத்தில் லீ குவான் யூ ஒலித்திருக்கிறார்.

மேலும் அந்தப் புத்தகத்தில்,



"சிங்கப்பூரைப் பொறுத்தவரை , இந்த நாட்டின் முன்னேற்றத்துக்காக, பல இன மக்களும் பாடுபட்டு வந்தாலும் சீனர்களையும் இந்தியர்களையும் போல அயராது உழைப்பவர்களைக் காண்பது அரிது. அதற்காக மனநெருடல் கொண்டு... இந்த நாட்டில் வாழ மற்ற இனத்தவர்களுக்கு உரிமை இல்லை என்று தடையா போடுகிறோம்? நொடிக்கு 10 சாதிக் கலவரம் என்று வெடிக்கும் பல நாடுகளை ஒப்பிடும் போது, எவ்விதச் சண்டையும் சச்சரவும் இன்றி எல்லா இனத்தவர்களும் இங்கே அமைதியாக வாழ்வது எனக்கு சந்தோஷம் அளிக்கிறது" என்று ஒரு சிறந்த தலைவனுக்குரிய செருக்கோடு பெருமிதம் கொள்ளும் லீ குவான் யூ,

"நான்காம் கட்ட ஈழப்போரில் தமிழர்களின் இந்தத் தோல்வி தற்காலிகமானதே. அவர்கள் வெகுநாட்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள்.

கூடிய விரைவில் இலங்கை அரசுக்கு எதிராக திரும்பவும் போர் தொடுப்பார்கள். அந்தநாள் வெகு தொலைவில் இல்லை" என்று கணித்திருப்பதைத் தான் உலக நாடுகள் சீரியஸாகக் கவனிக்கின்றன.

இவரது கணிப்புக்கள் பல சமயம்'நச்' என்று நிஜமாகி விடுவது தான் இதற்குக் காரணம். புகழ் பெற்ற அமெரிக்க அரசியல் ஆய்வாளர் ஹென்றி கிஸ்ஸிங்கர், "இரண்டு தலைமுறை அமெரிக்க ஜனாதிபதிகள், லீ குவான் யூவின் அறிவுரைகளைக் கருத்தில் கொண்டு நன்மை பெற்றது உண்டு.

சீனாவின் எதிர்கால அசுர வளர்ச்சியை முன்கூட்டிச் சொன்னதும் இந்தத் தலைவர் தான். இதனாலேயே சீனாவின் கம்யூனிஸ்ட் தலைவராக இருந்த புகழ் பெற்ற தலைவர் டெங்க் சியாவுபிங்க், தனது மிகப் பெரிய முடிவுகளை எல்லாம் லீயிடம் ஆலோசித்த பின்னரே எடுத்தார். அப்படிப்பட்டவரின் கணிப்பை ஒதுக்கித் தள்ள முடியாது!" என்று அழுத்தமாக அடிக்கோடு சொன்னதும் இங்கே கவனிக்கத்தக்கது.

இதைப்பற்றி ராஜபக்ச தரப்பினரோ, "சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்த ஆரம்பகால அரசியலில் பெரும்பான்மையான மந்திரிகள் இலங்கைத் தமிழர்களே.

சட்ட சபையில் அவர்களது எண்ணிக்கை காலப்போக்கில் குறைந்து வந்தாலும் லீ குவான் யூவுக்கு அவர்கள் மீது ஒரு தனிப் பற்று எப்போதுமே உண்டு.இலங்கை மீதான அவரது கோபத்துக்கு வேறு காரணமும் உண்டு... இலங்கையும் சிங்கப்பூரின் அளவில் உள்ள, சுற்றுலாவை மையமாகக் கொண்ட சிறிய தீவுதான்.


சிங்கப்பூரை விட இங்கு அதிக இயற்கை வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன.


ஆனால், சிங்கப்பூர் அளவுக்கு இலங்கை வளர்ச்சி அடையாததற்கு காரணம், அங்கு உள்ளது போன்ற சகல வசதிகளுடன் கூடிய துறைமுகம் இல்லை. இதனாலே, பல நாடுகளும் சிங்கப்பூர் முலமாகத் தங்களது வர்த்தகத்தை மேற்கொண்டு அந்த நாட்டை வளர்த்தன. இப்படி இருக்கும் நிலையில்,

தாய்லாந்தில் பல வருடங்களாக முடங்கிக் கிடந்த செயற்கைக் கால்வாய்(க்ரா கால்வாய்) திட்டம் முடுக்கி விடப்பட்டுள்ளது. அது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டால், சிங்கப்பூரின் வளர்ச்சி தடைப்படும். இதன் மூலம் இந்தியா, வங்கதேசம், இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் வர்த்தகம் பெருகிவிடும்.


கிடப்பில் கிடந்த அந்தத் திட்டத்தின் பேச்சுவார்த்தை சமீப காலங்களில் அடிபட... அதில் பதறிப் போய்தான் இது போன்ற அறிக்கைகளை வெளியிடுகிறார் லீ" என்று ஓணானுக்கும் டைனோஸருக்கும் முடிச்சுப் போளளடுகிறார்கள்!

ஆதித்யன்











யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா புட்டினிஸ் யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் கே. கணேசை சந்தித்துக் கலந்துரையாடுவதையும் ஆயர் இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்டபோது ஆயர் இல்லத்தினரால் வரவேற்கப்படுவதையும் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்துடன் கலந்துரையாடுவதையும், ஒஸ்மானியா வீதியிலுள்ள பெரிய ஜும்மா பள்ளிவாசலில் பள்ளிவாசல் நிர்வாகசபைச் செயலாளர் சட்டத்தரணி எம்.எம். ரம்ஸி மற்றும் பிரதம மௌலவி அப்துல் ரகுமான், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# அரசியலமைப்பில் கட்டம் கட்டமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியலமைப்பில் பல்வேறு திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. பிரதமர் டி.எம்.ஜயரத்ன முன்வைத்த இது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

அந்தவகையில், துரிதகதியில் கட்டம் கட்டமாக அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று பதில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

அரசாங்கம் நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் வகையில் தற்போதைய அரசியலமைப்பில் பல்வேறு திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது. அந்த வகையில் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக அபிவிருத்திகளை மேற்கொள்வதில் பல்வேறு தடைகள் காணப்பட்டன. மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுவந்தனர்.

தற்போது 30 வருடகால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், நாட்டின் சகல இடங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வேலைத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் VII, XI, XVIII ஆகிய அத்தியாயங்களில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கும் புதிய திருத்தங்களை முன் வைப்பதற்கும் அடையாளம் காணப்பட்ட சட்டங்களுக்கு தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளவும் இதுதொடர்பான சட்ட வரைவுகளை செய்யவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். (6-4)

# பணத்தைக் கொள்ளையிட்ட வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

அரச வங்கியொன்றில் பணத்தை கொள்ளையிட்ட வெளிநாட்டவர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள அரச வங்கியொன்றில் வெளிநாட்டவர் ஒருவர் ஆயிரத்து 600 அமெரிக்க டொலர்களை களவாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 ஆம் திகதி இந்த வெளிநாட்டு நாணயங்களை குறித்த நபர் களவாடிச் சென்றுள்ளதாக் குறிப்பிடப்படுகிறது. பாதுகாப்பு கமராக்களை பரிசோதனை செய்த போது பணத்தை களவாடிய வெளிநாட்டவர் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதாகவும் அதன் பின்னர் குறித்த நபரை பொலிஸார் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# ஐ.நா. உறுப்புரிமையை பெற இந்தியாவுக்கு ஆதரவளிக்கப்படும்

## ஜனாதிபதி மஹிந்த உறுதிமொழி



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்புரிமைக்காக போட்டியிடும் இந்தியாவிற்கு பூரண ஆதரவளிக்கப்படும் என இலங்கை அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் சுழற்சிமுறை ஆசனம் மற்றும் நிரந்தர உறுப்புரிமை ஆகிய இரண்டு பிரிவுகளிலும் இந்தியா போட்டியிட உள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிரூபமா ராவ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் மற்றும் குடியரசுத் தலைவி பிரதீபா பாட்டீல் ஆகியோரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக அழைத்துள்ளார்.

இந்த அழைப்பினை பிரதமர் மன்மோகன்சிங் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

2010/2011 கல்வி ஆண்டுடிற்கு பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் யாழ்.இந்துக்கல்லூரியில் 135 மாணவர்களும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் 39 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.


இதில் யாழ் .இந்துக்கல்லூரியில் பொறியியல் (MPR) பிரிவிற்கு 27 பேரும், பொறியியல் (EM) பிரிவிற்கு 2 பேரும், பொறியியல் (TM ) பிரிவிற்கு 2 பேரும், கணனி விஞ்ஞானத்திற்கு 10 பேரும், நில அளவையியலில் 2 பேரும், கணனி விஞ்ஞானமும் தொழில் நுட்பத்திற்கு 10 பேரும், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்திற்கு 10 பேரும், பௌதீக விஞ்ஞானத்திற்கு 3 பேரும், பிரயோக விஞ்ஞானத்திற்கு ஒருவரும், கணனித் தகவல் தொகுதியியலுக்கு 11 பேரும், மருத்துவத்துறைக்கு 9 பேரும், மருந்தியலுக்கு ஒருவரும், விவசாயத்தொழில்நுட்பத்திற்கு ஒருவரும், கதிரியக்கவியலுக்கு 2 பேரும், தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தாதியியல் மற்றும் விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடியியலும் பாடநெறிக்கு 05 பேரும், சூழல் பாதுகாப்பு முகாமைத்துவத்துக்கு 2 பேரும், விவசாய விஞ்ஞானத்திற்கு 10 பேரும், உயிரியல் விஞ்ஞானத்திற்கு 4 பேரும், பிரயோக விஞ்ஞானத்திற்கு 2 பேரும், விலங்கு விஞ்ஞானத்திற்கு 5 பேரும், ஏற்றுமதி விவசாயத்திற்கு ஒருவரும், சித்தமருத்துவத்ததுறைக்கு 2 பேரும், முகாமைத்துவத்துக்கு 3 பேரும், வர்த்தகத்துறைக்கு ஒருவரும், கலைத்துறைக்கு 9 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் பொறியியல் துறைக்கு 8 பேரும், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்திற்கு ஒருவரும், தொழில்தகவல் தொழில்நுட்பத்திற்கு 2 பேரும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு 2 பேரும், பௌதீக விஞ்ஞானத்திற்கு ஒருவரும், விஞ்ஞானத்துறையில் மருந்தாளர், உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமையும் விவசாயம், விலங்கு விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், சித்த மருத்துவம் ஆகிய துறைகளுக்கு தலா ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் வர்த்தகத்துறையில் பொது முகாமைத்துவத்துக்கு 2 பேரும், முகாமைத்துவத்திற்கு 5 பேரும், வணிகத்துறைக்கு 3 பேரும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு 5 பேரும், கலைத்துறைக்கு ஒருவரும், சங்கீதத்துறைக்கு 2 பேரும், நடனத்துறைக்கு ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (6-4)

# யாழ்ப்பாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சியாளர்களுக்கு கரம்கொடுக்கும் NDB வங்கி







தமது ஆரம்ப காலம் தொட்டு, சிறிய மற்றும் நடுத்தர ரீதியான நிதி வழங்கலை தமது முழுமையான நோக்காக கொண்டே, NDB வங்கி இயங்கி வருகின்றது. வளர்ந்து வரும் வர்த்தக முயற்சியாளர்களுக்கு நிதி ஸ்திரத் தன்மையினை வழங்குவதுடன், அவர்களுடைய வாழ்க்கையினை வளப்படுத்தவும், இவ்வாறான நிதி வழங்குவதுடன், அவர்களுடைய வாழ்க்கையினை வளப்படுத்தவும், இவ்வாறான நிதி வழங்கல் களம் அமைத்துள்ளமை ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. வணிக முயற்சியாளர்களுக்குத் தேவையான தொழில்சார் அறிவினை வழங்குவதோடு, அவர்களது தொழிலை அபிவிருத்தி செய்யும் வகையில் நிதி வசதியினை வழங்கி, உள்ளூர் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதனூடு, இலங்கை மக்களின் வாழ்க்கை முறைமையினை மேலும் சிறப்பிக்க முடியும் ன்பதை NDB வங்கி முழுமையாக நம்புகின்றது.

இவ் வங்கியானது, கடந்த இரண்டு காலாண்டுகளில் வடக்கு மற்றும் கிழக்கில் 5புதிய வங்கிக் கிளைகளை ஆரம்பித்து தமது பிரசன்னத்தை அந்தப் பிரதேசங்களில் உறுதிசெய்துள்ளதுடன் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சிகளுக்கான(SME) நிதியை வழங்குவதனூடாக இலங்கையின் முதன்மை நிதியில் நிறுவகமாகத் திகழ்கின்றது. குறித்த இந்தக் கிளைகள் ஊடாக, மீன்பிடி, உற்பத்தி துறை, ஹோட்டல்கள், உல்லாசத்துறை, விவசாயம், வணிக போக்குவரத்து, வணிக நடவடிக்கைகள் போன்ற வர்த்தக முயற்சிகளில் ஈடுபடும் SME களுக்கு சகாயமளிப்பதன் மூலம், யுத்திற்குப் பின்னரான இன்றைய காலத்தில், உத்வேகத்துடன் மேலெழும் இலங்கை மக்களின் வாழ்க்கையினை செழுமைப்படுத்துவதை தமது நோக்காகக் கொண்டுள்ளது. வங்கியானது, தேவையானவர்களுக்கு நிதி யுதவியினை வழங்குவதோடு மட்டும் நிறுத்திவிடாமல், SME பிரிவினருக்கு, அவர்கள் தமது கணக்குகளைப் பதிதல், நிதிகள் மற்றும் கணக்குகளைப் பேணுதல், முகாமைத்துவ திறன்கள், செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், தமது தொழிலுக்கான நிதியினை பெற்றுக்கொள்தல் போன்ற தொழில் அறிவு சார் நடவடிக்கைகள் தொடர்பான பல பயிற்சிநெறிகளை நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும், வழங்கி வருகின்றது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின்ன அபிவிருத்தி செய்வதான வங்கியின் கடப்பாடு தொடர்பாக விளக்கமளித்த NDB வங்கியின் பிரதம நிறைவேற்றதிகாரி ரசல் டிமெல் அவர்கள், "எமது நாட்டுப் பொருளாதாரத்தினை மேம்படுத்தி, அபிவிருத்திப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கான ஜீவாதாரமாக விளங்கும் சிறிய அளவில் தமது தொழிலை நடாத்தும் வர்த்தக முயற்சியாளர்களுக்குத் தேவையான நிதி வசதியை வழங்குவதை, NDB வங்கி தனது பொறுப்புடைமையாகக் கொண்டுள்ளது" எனக் கூறினார்.

இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தினையும், அதனூடாக சமூகத்தினையும் கட்டியெழுப்புவதற்கான வலுவூட்டலை வழங் கும் வகையில், NDB வங்கியானது, "NDB திவி அருண" என்ற பெயரில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான வங்கியி யல் சேவைகளை, அண்மையில் யாழ்ப்பா ணத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் அங் குரார்ப்பணம் செய்துவைத்தது. அந்த வைப வத்தில், NDB வங்கியின் திவி அருண பற்றி கருத்துத் தெரிவித்த NDB வங்கியின் SME மற்றும் நிபுணத்துவ வர்த்தக சந்தைகளுக்கான உபதலைவர் ராஜ் அபுபக்கர் அவர்கள், யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில், வர்த்தக முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிப்பதற்கு இந்தத் திட்டம் உதவும் என்ற நம்பிக்கையினை வங்கி கொண்டுள் ளதாக தெரிவித்தார். வர்த்தக முயலுனர் களது கட்டாயத் தேவையான மூலதனத் தினை, வசீகரமான கட்டணங் கள் மற்றும் நெகிழ்ச்சியான மீளச் செலுத்தும் முறைகளுடனும், இலகுவான அணுகும் தன்மையுடனும் வங்கி வழங்குவதாக அவர் எடுத்துக்கூறினார். முதற்கட்டமாக மீன்பிடித் துறையினரை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் இயங்க ஆரம்பித்துள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் இடம் பெற்ற நிகழ்வின் போது, மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் ஏராளமானவர்களுக்கு தேவையான நிதியனை வங்கி வழங்கியது. குறித்த இந்த நிதியானது, குறித்த மீனவர் களின் வாழ்க்கையினை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், அவர்கள்ஃபைபர் கிளாஸ் படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு உபயோகிக்கப்படும்.

மீன்பிடி, விவசாயம், கால்நடை மற்றும் பிற சிறியளவிலான கைத்தொழில்களை இலக்காகக் கொண்டு இயங்கும் NDB வங்கியின் திவிஅருண திட்டத்தினை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துவதற்கு வங்கி எண்ணியுள்ளது. குறித்த இந்தத் திட்டமானது, வாடிக்கையாளர்களுக்கும் வங்கிக்கும் இடை யிலான தொடர்புககளை மேலும் வலுப்படுத் துவதோடு, சமுதாயத்தில் நல்ல பல மாற்றங்களையும் ஏற்படுத்தும்.

குறித்த இந்தத் திட்டமானது, சமூகத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை வளப்படுத் துவதோடு, அவர்களி டமுள்ள வர்த்தக முயலாண்மைத் திறன்களி னை உபயோகித்து புதிய வர்த்தக முன்னெடுப்புக்களை ஆரம்பித்து, அதன் வழியே அவர்கள் சார்ந்த சமூகத்தினையும், பிராந்தியத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பினை வழங்குகின் றது என்றால் அது மிகையில்லை.

NDB வங்கியானது, தற்போது நாட்டில் மிகத் துரிதமாக வளர்ந்துவரும் வர்த்தக வங்கிகளில் ஒன்றாக விளங்குவதுடன், NDB குழுமமானது மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலும் தமது செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு உட்பட்ட தமது நாடளாவிய கிளை வலையமைப்புக்கள் ஊடாக வங்கியானது விசாலமான வர்த்தக வங்கியியல் சேவைகளை வழங்கியிருக்கின்றது.




# CDB நிறுவனத்திற்கு 2009/10 இல் ரூபா 1519 மில்லியன் வருமானம்



CDB நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஸ் நாணயக்கார

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட் நிறுவனத்தின் 2010 மார்ச் மாதத்தில் முடிவடையும் நிதியாண்டுக்கான வரிக்கு முன்னரான இலாபம் (வருடா ந்த) ரூபா 71 மில்லியனை தாண்டியுள்ள அதே வேளை, 2010 மார்ச் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டில் இருந்தவாறான வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் (வருடாந்த) ரூபா 64 மில்லியனையும் தாண் டியுள்ளது.

இந்த தரவுகள் 0.37% மற்றும் 2.5% என்ற மிகக் குறைந்தளவிலான வீழ்ச்சியையே வெளிப்படுத்துகின்றன. குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறுவனமானது திருப்தியடையக் கூடிய விதத்தில் செயற்பட்டுள்ளதையே இத் தரவுகள் பிரதிபலிக்கின்றன என்று CDB கருதுகின்றது.

நிறுவனத்தின் வருமானம் (வருடாந்த அடிப்படையிலானது) ரூபா 1519 மில்லியன் எனப் பதிவாகிய அதேவேளை 2009/2010 நிதியாண்டில் (வருடாந்த அடிப்படையிலான) தேறிய வரி வருமானம் 19.7 வீதத்தினால் அல்லது ரூபா 404 மில்லியனால் அதிகரித்து 483 மில்லியன் ரூபாவாகியுள்ளது. CDB நிறுவனத்தின் மொத்த சொத்துத் தளமானது 2010 மார்ச் 31 ஆம் திகதியன்று ரூபா 6676 மில்லியனாக அதிகரித்திருந்த துடன் 2010 மார்ச் 31 இல் CDB இன் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 513 மில்லியனுக்கும் அதிகமானதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

கருத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியின் இறுதியில் CDB நிறுவனத்தின் செயற்படா கடன்களின் (NPL Ratio) வீதம் 7.52 வீதமாகக் காணப்பட்டது. இது இத் துறையில் காணப்படும் சராசரியை விடக் குறைவானதாகும்.

CDB நிறுவனத்தின் பணிப்பாளர்/ பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியான மகேஸ் நாணயக்கார கூறுகையில், நிறுவனத்தின் இப்பெறுபேறுகள் வாடிக்கையாளர்களை மையப்படுத்தி வர்த்தக அணுகுமுறை, கலாசாரத்தை வழிநடத்தும் செயற்பாடுகள், எமது வர்த்தகத்துடன் எமது மக்களுக்குள்ள இயல்பான இடைத்தொடர்பு மற்றும் ஆளுகை முயற்சி தொடர்பில் நாம் வெளிப்படுத்தும் அர்ப்பணிப்பு போன்ற எமது உள்ளார்ந்த அடிப்படை விடயங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

நிறுவனத்தின் வரலாற்றிலேயே மிகவும் சவால்மிக்க ஆண்டாக காணப்பட்ட கடந்த வருடத்தின் சவால்களை எதிர்கொண்ட ஒரு வெற்றி அணியாக ஒன்றிணைக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட நம்பிக்கை மற்றும் புத்துணர்வு பெற்ற மனோநிலை ஆகியவற்றினால் கூட்டாக உருவாக்கப்பட்ட பலாபலன்களை சாதகமாகக் கொண்டு இலங்கையின் யுத்தத்திற்குப் பின்னரான மற்றும் உலகப் பொருளாதாரத்தின் சுழற்சியில் ஏற்படும் அபூர்வமான வாய்ப்புக்களை CDB நிறுவனம் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

CDB நிறுவனமானது முக்கிய நிதியியல் இலக்கு களை உள்ளடக்கிய மூன்றாண்டுகால உபாய திட்டமொன்றை வகுத்துள்ளது. அடகு பிடித்தல், வெளிநாட்டு நாணய மாற்று சேவை (அங்கீகாரம் பெற்ற நாணய விநியோகஸ்தர்), பணம் அனுப்பும் சேவை, இஸ்லாமிய நிதியளித்தல் சேவை மற்றும் சேமிப்பு வைப்புகள் போன்ற புதிய உற்பத்திகளை அறிமுகப் படுத்துவதன் மூலம் முழுமையான நிதியியல் சேவைகள் வழங்குநராக CDB நிறுவனத்தை நிலைநிறுத்தும் வகையில் இந்த திட்டம் அமைந்துள்ளது.

CDB நிறுவனமானது வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கும் முகமாக தனது கிளை வலையமைப்புக்கு தரமுயர்த்தப்பட்ட வசதிகளை வழங்கி அவற்றை மீள ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரங்களில் அனைத்து வசதிகளையும் கொண்ட சேவை நிலையங்களை திறந்ததன் மூலம் வடக்கிற்கும் தனது சேவைகளை விஸ்தரித்துள்ளது.

கிராமியப் பொருளாதாரத்தின் ஏக கடன் வழங்குனராக திகழ வேண்டுமென்ற எமது விருப்பத்தினைப் வெளிப்படுத்தும் வகையில் எமது ஒப்பற்றதும் பரந்துபட்ட அளவிலானதுமான வர்த்தக மாதிரியானது கிராமியக் கடன் வழங்கல் மற்றும் நகரங்களுக்கு நிதியளித்தல் என்ற அடிப்படையுடன் இணைக்கப்பட்டதாகவுள்ளது. கடன் வழங்கல் உற்பத்திகளுக்கான பல்வேறு சந்தை இணைப்பு தொடர்பான அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக இந்த வர்த்தக மாதிரியானது தயார் படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. அத்துடன் இந்தப் பிரிவிலுள்ள வாடிக்கையாளர்கள் வாடிக்கையான கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றுடன் தொடர்புகளைப் பேணுவதற்கும் இது வாய்ப்பாக அமையும். மறுபுறத்தில் வாடிக்கையான நிதி நிறுவனம் ஒன்றுடன் சாதகமான வர்த்தக உறவொன்றினை கட்டியெழுப்புவதிலுள்ள பரஸ்பர நன்மைகள் தொடர்பில் இது அவர்களுக்கு அறிவூட்டுவதுடன் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்.

போவது சரியான பாதையாக இல்லாத போது-வேகமாக ஓடுவதால் என்ன பயன்.
~ ஜேர்மனி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எங்களுள் இருக்கும் அதர்மத்தை அழித்தொழிக்க வேண்டும்

இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்குமா? இல்லையா? என்ற கேள்விக்கான பதிலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் நமக்குத் தந்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு இந்திய அரசு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வலியுறுத்தவில்லை என்பது தெரியும். 13ஆவது திருத்தச்சட்ட மூலத்திற்கு அதிகப்படியாக தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி இந்திய அரசிடம் தெரிவித்ததாக கூறப்படுகின்றது. இவை குறித்து நம்பிக்கை கொள்வது அர்த்தபுஷ்டியான விடயம் அன்று.

இந்தியாவோ அண்டை நாடுகளோ இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்குமாறு வலியுறுத்தப்போவதில்லை என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

வேண்டும் என்றால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுங்கள் என மேலோட்டமாக ஆலோசனை கூறுவது மட்டுமே இடம் பெறும்.

இந்த ஆலோசனைகள், எல்லாவற்றையும் இழந்து வெறுவிலிகளாக இருக்கும் தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் ஆறுதல் தரமாட்டா.

அதேநேரம் இலங்கை அரசு தமிழ் மக்களை மதித்து நடக்கும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

இத்தகைய மிக மோசமான பரிதாபத்திற்குள் தமிழ்மக்கள் ஆளாகியிருக்கின்றனர். இந்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும் என்று தீர ஆலோசிப்பது கட்டாயமானதாகும்.

அந்த ஆலோசனையில் தமிழ்மக்கள் தமது பக்கம் தர்மத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

தர்மத்தின் தேய்வு எங்களின் பரிதாப நிலைக்கு காரணம் என்ற உண்மையை நாம் மறந்துவிட முடியாது.

தர்மம் என்று எதைக் கூறுகிறீர்கள் என நீங்கள் கேட்பது புரிகிறது. அரசியலில் தர்மம் என்பது ஒற்றுமை, இனப்பற்றுறுதி, மக்களை ஏமாற்றாமை, ஊழல் புரியாமை, ஏழைகளை வஞ்சிக்காமை, காட்டிக்கொடுக்காமை, உளவுவேலை செய்யாமை, கொல்லாமை உள்ளிட்ட பல வற்றை உள்ளடக்கும்.

குறிப்பாக தமிழ் அரசியல் தலைமைகள் மிகப் பெரும் துரோகத்தை தங்கள் இனத்துக்கு செய்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அரச சார்புடையவர்கள் நுழைந்துவிட்டார்கள் என்பதை மக்கள் உணரத்தொடங்கியுள்ளனர்.

இந்த உணர்நிலை மூத்த தலைவர் இரா.சம்பந்தரின் அரசியல் நடவடிக்கைகளில் கூட சந்தேகத்தை எழவைத்துள்ளது. இவை மக்கள் பேசிக் கொள்வதுதான்.

விடுதலைப்புலிகளின் தோல்விக்கு தனித்து அரசு மட்டும் காரணமல்ல. விடுதலைப் புலிகளுடன் சேர்ந்திருந்து நடித்து அவர்களை தமது தேவைகளுக்கு பயன்படுத்தியவர்களே முக்கிய காரணம் என்பது மெல்லமெல்ல வெளிப்படத் தொடங்கியது.

துரோகிகள் அல்லாதவர்கள துரோகிகள் என்றும், துரோகிகளை துணை என்றும் நம்பிய விடுதலைப் புலிகள் போரில் தோற்றுப்போயினர்.

ஜூனியர் விகடன் கூறியது போல விமர்சனத்தை துரோகம் எனப் புலிகள் கருதியது மிகப் பெரும் தவறு என்ற கருத்தில் தமிழ் மக்களுக்கு உடன்பாடு இருக்கவே செய்யும்.

எதுவாயினும் தமிழ்மக்கள் மெய்ம்மையாளர்களை கண்டறியவேண்டும். இல்லையேல் சேர்ந்திருந்தே தமிழினத்தை அறுத்தொழிக்கும் அலுவல் நடந்தேறுவதை தவிர்ப்பது மிகக்கடினம்.

# உயர்ந்த பண்பாளனாக திகழ்ந்த பேராசிரியர் அ.துரைராஜா

அமரர் பேராசிரியர் அ.துரைராஜாவின் நினைவு தினம் இன்றாகும். உயர்ந்த மனிதப் பண்பாளனின் நினைவு தினத்தை எல்லோரும் நினைவு கொள்வது அவசியமானது.

1934 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வடமராட்சியில் உடுப்பிட்டி எனும் கிராமத்தில் பிறந்த துரைராஜா அவர்கள் தனது ஆய்வு பலத்தாலும் பண்பினாலும் அறிவின் மேலெழுகையாலும் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் தெரியப்பட்ட, அறியப்பட்ட உயர்ந்த அறிஞனாக போற்றப்படுகின்றார்.

## இன்று அவரது 16ஆவது சிரார்த்ததினம்

அவரது எளிமையையும் பண்பையும் மனப்பக்குவத்தையும் மாணவனாக, தற்காலிக விரிவுரையாளராக பணியாற்றிய காலத்தில் கண்டுகொண்டமை மறக்க முடியாதது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணச் சமூகமும் மிக நெருக்கடியான இக்கட்டான காலத்தில் அவரது சேவை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு கிடைத்தது அதிர்ஷ்டம் என்றே கருத வேண்டும். தனது பணிக்கு அவர் வருகை தரும் விதம் தனித்துவமானது. உடுப்பிட்டிக் கிராமத்திலிருந்து துணைவேந்தர் வருகை தருவதென்பது அவரது எளிமை மட்டுமல்ல எத்தகைய நெருக்கடியையும் எதிர்கொள்ளும் சவால் மிக்கவர் என்பதைக் காட்டியது.

அதிலும் குறித்த நேரத்திற்கு முந்தியே பணிக்கு சமுகமளித்து விடுவார். பணி முடித்து உரிய நேரத்திற்கு தனது துவிச்சக்கரவண்டிப் பயணத்தை ஆரம்பித்து விடுவார். சில வேளைகளில் இரவு நேரத்திலும் துவிச்சக்கரவண்டியில் பணியை முடித்து பயணம் செய்வதை காணமுடிந்தது.


அவரது காலத்தில் கிளிநொச்சியில் இயங்கத் திட்டமிட்ட விவசாய பீடத்தை துவிச்சக்கர வண்டியில் பேராசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் அழைத்துச் சென்றமை பற்றி அடிக்கடி பொருளியல் பேராசிரியர் நித்தியானந்தன் குறிப்பிடுவார்.

நிர்வாகியின் உயர்ந்த பண்பினை அவரிடம் சிறிதுநேரம் உரையாடினால் புரிந்து விடலாம். முதலில் அலுவலகத்திற்கு வரும் எவரையும் சமமானவராக கருதி நடந்து கொள்ளும் பண்பு அவரிடம் இருந்தது.

பின்னர் அவரது பிரச்சினையை மிக நிதானமாக இருந்து கேட்பார். வருபவர் யாராக இருந்தாலும் பிரச்சினையின் முழுவதையும் ஒப்புவிக்கும் வரை காத்திருப்பார். தனது ஆலோசனையையும் தீர்வையும் முன்வைப்பதில் தலைசிறந்தவர்.

நாம் மாணவ பிரதிநிதிகளாக இருந்த போது உடற்கல்வி விரிவுரையாளர் இளம்பிறையும் நானும் பல தடவை அவரை சந்தித்திருக்கிறோம். தனிப்பட்ட நெருக்கடியான காலகட்டத்தில் கூட உதவிகோரியபோது எதையும் மனிதில் கொள்ளாமல் உடன் பிறப்புப் போல் உதவும் உயர்ந்த பண்பாளனாக பேராசிரியர் செயல்பட்டார். உயர்ந்த எண்ணம் கொண்ட துணைவேந்தர் காலத்தில் கல்வி கற்றோம், பணிபுரிந்தோம் எனக் கருதும்போது மிக மகிழ்வாக உள்ளது. அவர் என்றும் எங்களோடு வாழ்வார்.

**கே.ரீ.கணேசலிங்கம்**
தலைவர், சமூகவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# தான தருமங்களின் பலன்கள்

வாழ்க்கையில் நாம் தானதருமங்கள் செய்து வாழ வேண்டும். அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு தானத்திற்கும் ஒவ்வொரு விதமான பலன்கள் உண்டு.

வஸ்திரதானம்-ஆயுள் விருத்தியைத் தரும், பூமி தானம்- பிரம்ம லோகத்தைத் தரும், தேனை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து தானம் செய்தால் புத்திரபாக்கியம் உண்டாகும், நெல்லிக்காய் தானம் -ஞானத்தைத் தரும்.

கோயிலில் தீபதானம்-உயர்ந்த பதவி கிடைக்கும், விதை வித்துக்கள் தானம்- தீர்க்காயுளையும் சந்ததி விருத்தியையும் தரும், அரிசி தானம்-பயம் போக்கும், பழம் தாம்பூலதானம்- சுவர்க்கத்தைத் தரும், கம்பளிதானம்-வாயுரோகம் நீங்கும், அன்னதானம்-நினைத்தது கிட்டும்.

## வெள்ளி நற்சிந்தனை 126

# பக்தியின் மொழி தமிழ்

நாள்தோறும் திருக்கோயில் வழிபாடு செய்வது நலம் தரும். எமது சைவ சமயம், கோயில் வழிபாட்டு நடைமுறைகளை நெடுங்காலமாகப் பேணி வருவதற்கும் இதுவே காரணமாகும். சைவத் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ள தேவாரப் பாடல்கள் கோயிற் சிறப்புப் பற்றியே பாடியுள்ளன. கோயிலில் வழிபாடு செய்யும்போது அங்கே எழுந்தருளியுள்ள இறைவனுடைய கோலத்தைப் பார்த்து பக்திப் பரவசப்படுதல் இயல்பாகும். திருக்கேதீஸ்வரத்திலே அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இறைவனுடைய தோற்றத்தைச் சம்பந்தரது பாடல் அழகாகக் காட்டியுள்ளது. பொடிகொள் மேனியர் என இறைவனுடைய திருமேனியழகு கூறப்பட்டுள்ளது. வெண்மையான திருநீற்றுப் பொடியணிந்த மேனியழகே சம்பந்தருக்கு முதலில் தென்படுகிறது. 'சுடலைப் பொடி' பூசிய திருமேனியை மூன்றாம் வயதிலேயே சம்பந்தர் கண்ணாரக் கண்டு வியந்து பாடியவர். அதே திருக்கோலத்தினைத் திருக்கேதீஸ்வரத்திலும் காண்கிறார். அப்பரும் சிவனுடைய நீறணிந்த அழகுக் கோலத்தை 'பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்' என்று பாடியுள்ளார்.

அடுத்துச் சிவன் அரையிலே அணிந்திருக்கும் ஆடை பற்றிய குறிப்பு அமைந்துள்ளது. 'புலி அதள் அரையினர்' என்ற தொடர் அரையிலே புலித் தோலாடை அணிந்திருக்கும் தோற்றத்தைக் காட்டுகிறது. கரங்களிலே ஒரு கரத்தில் விரிந்த நிலையிலே மூவிலை வடிவுடைய வேலைத் தாங்கி நிற் கிறார். மேலும் திருமேனியில் முப்புரி நூலையும் அணிந்திருக்கிறனர். இத்தகைய திருக்கோலத்தைக் காணும்போது இறைவனின் எல்லையில்லா அழகு எல்லோர் மனதையும் கவரும். வழிபடச் செல்வோர் மனமும் உடலும் வழிபாட்டில் ஒன்றிணையும்.

இதனையும் சம்பந்தரது பாடல்கள் விளக்கியுள்ளன. பக்திக் கோலம் என்பது செயற்கையானது அல்ல. மனம் பொறி வழிகளிற் செல்லாது இறைசிந்தனையிலே ஒன்றி நிற்கும் போது இறைவனுடைய திருக்கோலம் ஒரு பரவச நிலையை ஏற்படுத்தும். மேலும் இறைவனையே எண்ணி யவராய் தமது தலையை நிலத்திலே படும்படி வைத்து வணங்க வல்லவர்மேல் மொய்த்திருக்கும் வினைகள் எல்லாம் ஓடிப்போய்விடும். தலை நிலத்திலே படும்படி வணங்குவதற்கு இரண்டுவகையான வணக்க முறைகள் உள்ளன. ஒன்று ஆண்களுக்குரிய அட்டாங்க நமஸ்காரம். இதில் தலை உட்பட எட்டு அங்கங்கள் நிலத்திலே படும்படி வணங்க வேண்டும். மற்றது பெண்களுக் குரிய பஞ்சாங்க நமஸ்காரம். தலை உட்பட ஐந்து அங்கங்கள் நிலத்தில் படும்படி வணங்க வேண்டும். இவ்வணக்க முறைகள் தற்போது இளந் தலைமுறையினரால் செயற்படுத்தப் படுவதில்லை. தலையை நிலத்திலே படும்படி வைத்து வழிபடுவதற்கு கூச்சப்படுகின்றனர். ஒருவர் தன்னுடைய முடியைச் சாய்த்து வணங்க வல்லலவராயின் வினையிலிருந்து விடுபடுவார் எனச் சம்பந்தர் கூறியுள்ளார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவனுடைய திருவடியைப் பற்றியே எந்நேரமும் எண்ணியிருப்பவர் பக்திவயப்பட்டவராவர். திருக்கேதீஸ்வரத்தில் வீற்றிருக்கும் இறைவனைப் பேணவேண்டும். இறை நம்பிக்கையென்பது உள்ளத்திலே குடிகொள்ளவேண்டும். கடல் மறித்திருக்கும் மாதோட்டத்திலே அமைந்திருக்கும் திருக்கேதீஸ்வரத்தைச் சென்று எல்லோரும் வழிபட்டுப் பயன் பெற வேண்டும் என்பதே திருஞான சம்பந்தரது நோக்கமாக இருந்துள்ளது என்பதை பாடலும் நன்கு புலப்படுத்தி நிற்கிறது.

'பொடிகொள் மேனியர் புலி அதள் அரையினர் விரிதரு
கரத்துஏந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டம்
அடிகள் ஆதரித் திருந்த கேதீஸ்வரம் பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழு
வினைபோமே'

# பிரிட்டனில் குடியேற விரும்புவோர் ஆங்கில அறிவை பெற்றிருக்க வேண்டும்

## புதிய திட்டம் அறிமுகம்

பிரிட்டிஷ் பிரஜைகளை திருமணம் செய்து பிரிட்டனில் குடியேற விரும்புவர்களும் ஆங்கிலம் கற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தும் திட்டம் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்கம் அறிமுகப்படுத்தியு ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியே உள்ள நாடுகளில் இருந்து இவ்வாறு பிரிட்டனுக்கு வர விண்ணப்பிப்பவர்கள் ஆங்கிலத்தில் அடிப்படை அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் ஏற்கனவே திருமணமாகி அல்லது திருமணமாகாமல் பிரிட்டனில் இருக்கும் ஜோடிகளுக்கும் ஒரு பாலின ஜோடிகளுக்கும் இது பொருந்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பிரஜைகளை திருமணம் செய்பவர்கள் பிரிட்டனுக்கு வர ஆங்கில அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தும் விதிகள் முதன் முதலில் 2007 இல் தொழிற்கட்சியினரால் முன் மொழியப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் இதனை அமுலுக்குக் கொண்டுவர இவர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் இப்போது புதிய அரசாங்கத்தின் கீழ் எதிர்வரும் செப்டம்பர் மாதத்திலிருந்து இது அமுலுக்கு வருகிறது.

தற்போதைய நிலையில் பிரிட்டிஷ் பிரஜைகளை திருமணம் செய்பவர்கள் விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கான விதிகள் *அவர்களுடைய திருமணம் உண்மையானது அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்க உதவி நிதிகளில் தங்கியிருக்கமாட்டார்கள் என்பவற்றை உறுதி செய்ய வேண்டும்* என்பதையே வலியுறுத்துகின்றனர்.

ஆங்கிலம் பேசத்தெரிந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துவது பிரிட்டிஷ் சமூகத்தில் இரண்டறக் கலப்பதற்கும் கலாசார தடைகளை களைவதற்கும் பொதுச் சேவைகளை பாதுகாப்பதற்கும் ஊக்கமாக அமையும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறுகிறது.

குடியேறி வருபவர்கள் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள முடியாத போது பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் சமூகத்தில் தனிமைப்பட்டுப் போவதாகவும் குடிவரவு அமைச்சரான டாமியன் கிறீன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியே இருந்து பிரிட்டிஷ் பிரஜைகளை திருமணம் செய்தவர்கள் 59ஆயிரம் பேருக்கு பிரிட்டனில் குடியேற விசா வழங்கப்பட்டது. புதிய விதிகள் இந்த தொகையை 10 வீதத்தால் குறைக்கும் என்று அதிகாரபூர்வ மதிப்பீடுகள் கூறுகின்றன.

இந்த நகர்வு தெற்காசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள ஆங்கிலம் பேசாத நாடுகளை சேர்ந்தவர்களை சமச்சீரற்ற வகையில் பாதிக்கும் என்று குடியேறிகளுக்கான நலக் குழுக்கள் கூறுகின்றன.

இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், பங்களாதேசத்தவர்கள் மற்றும் இலங்கையர் இதனால் பாதிக்கப்படுவார்கள். பிரிட்டிஷ் பிரஜைகள் அவர்களது வெளிநாட்டு வாழ்க்கைத் துணைவர்களை பிரிட்டனுக்கு அழைத்துக் கொள்வதற்கான விசா ஆனது ஒருவரை பிரிட்டனில் இரண்டு வருடங்கள் வாழ அனுமதிக்கிறது.

அதன் பின்னர் அவர்கள் பிரிட்டனில் காலவரையின்றி வாழ்வதற்கான அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம் விண்ணப்பதாரிகள் பின்னர் *ஐக்கிய இராட்சியத்தில் வாழ்க்கை மற்றும் மொழி* ஆகியவை குறித்த மேலதிக பரீட்சையிலும் தேறியாக வேண்டும் என்று கூறினார்.

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக பெனிக்னோ அகினோ தெரிவு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக பெனிக்னோ அகினோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்க்கட்சி வேட்பாளரான இவர் ஒரு கோடியே 52 இலட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவரை அடுத்து அதிக வாக்குகள் பெற்ற எஸ்ட்ராடாவை விட 57 இலட்சம் வாக்குகள் கூடுதலாக பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் முன்னாள் ஜனாதிபதி கராசோன் அகினோவின் மகன் ஆவார். இம் மாதம் 30 ஆம் திகதி பதவியேற்கும் இவருக்கு எஸ்ட் ராடாவின் தோழர் ஜெஜோமார் பினாய் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்படவுள்ளார். இவர் அகினோ கட்சி சார்பில் போட்டியிட்ட செனட்டர் மானுவல் ரோசாஸ்சை விட 7 இலட்சத்து 27 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றவர் ஆவார். (6-4)

## ஆப்கானிஸ்தானில் திருமண வைபவமொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 39 பேர் பலி

ஆப்கானிஸ்தானின் தென் மாநிலமான கந்தஹாரில் திருமண வைபவமொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 39 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் மேலும்70 பேர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமண விருந்துபசாரத்தை இலக்கு வைத்து ஏன் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறித்து இதுவரையில் தகவல்கள் வெளியிடப்படவில்லை எனவும் இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரையில் எவரும் உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்காக ஆசனம் ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மணமகனும் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலிபான்கள் செறிந்து வாழும் பிரதேசத்திலேயே இந்த திருமண வைபவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் அண்மைய நாட்களாக வன்முறைகளின் எண்ணிக்கை மேலும் உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வாரத்தில் மட்டும் 20 நேட்டோ படைவீரர்கள் தாக்குதல்களினால் கொல்லப்பட்டுள்ளனர். (6)



போலந்தில் பெய்த கனமழையால் டிரோஸியான் போலஸ்கி நகரமே வெள்ளக்காடானது. இப்பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய கல்லறை தோட்டம் முழுவதும் தண்ணீரால் சூழ்ந்துள்ளது.




## குண்டுகளுடன் "எச்.ஐ.வி" ஊசிகளையும் புதைக்கும் தலிபான் போராளிகள்

ஆப்கானிஸ்தானிலுள்ள பிரித்தானியப் படையினருக்கு எயிட்ஸ் நோய்த் தொற்றை ஏற்படுத்த தலிபான் போராளிகள் தெருவோர குண்டுகளுடன் எச்.ஐ.வி. வைரஸ் ஏற்பட்ட ஊசிகளையும் சேர்த்து புதைத்து வருவதாக முன்னாள் இராணுவ உத்தியோகத்தரும் ஆளும் பழமைவாத கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான பற்றிக் மெர்சர் அதிர்ச்சித் தகவலை செவ்வாய்கிழமையன்று வெளியிட்டுள்ளார்.

குண்டுகள் வெடிக்கும் போது இந்த ஊசிகள் காற்றில் கலந்து சென்று அருகில் உள்ளவர்களின் உடலை பதம் பார்த்து அவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்றை ஏற்படுத்தும் என அவர் கூறினார்.

இத்தகைய எயிட்ஸ் வைரஸை கொண்ட ஊசிகள் ஆப்கானின் ஹெல்மண்ட் மாகாணத்திலேயே பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், எச்.ஐ.வி தொற்றுள்ள சவர அலகுகளையும் தலிபான் போராளிகள் பயன்படுத்துவதாக அவர் கூறினார். (6-4)

## ஈரானுக்கு எதிராக ஐ.நா பொருளாதாரத்தடை விதிக்குமா?

ஈரானுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பு கடுமையான இராணுவ பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.


அணுத்திட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபந்தனைகளை ஈரான் பூர்த்தி செய்யத் தவறியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஈரானுக்கு எதிராக நான்கு சுற்று தடைகளை விதிப்பது குறித்த வாக்கெடுப்பு பாதுகாப்புப் பேரவையில் நடைபெறவுள்ளதெனவும் ஈரானுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் ஈரான் எதிர்நோக்கிய கடுமையான பொருளாதாரத் தடையாக இது அமையும் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் இதுபற்றி கூறினார்.

ஈரான் இரகசியமாக அணுவாயுதங்களைத் தயாரித்து வருவதாக மேற்குலக நாடுகள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் சக்தி வளப் பயன்பாட்டுக்காக தாம் அணு ஆலைகளைப் பயன்படுத்துவதாக ஈரான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

அதேவேளை தடைகள் விதிக்கப்பட்டால் அணுத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (6-4)



அணுத்திட்டம் தொடர்பாக ஈரானுக்கு தடைவிதிப்பதற்கான வாக்கெடுப்பு ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் ஐ.நா வின் பாதுகாப்புச் சபை கூட்டம் நடைபெற்றது.(உள்படம்) வாக்கெடுப்பினை ஈரானுக்கான ஐ.நா தூதரர் முகமது காஹாசி பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்து கவனிக்கிறார்.

# உலகக்கிண்ண கால்பந்து திருவிழா தென்னாபிரிக்காவில் இன்று ஆரம்பம்



உலகின் கோடிக் கணக்கான ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் இன்று தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகின்றது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத்திருவிழாவான உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர் மங்களகரமாக இன்று முதல் எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி வரை நடைபெறுகின்றது.

மொத்தம் 32 அணிகள் மோதும் இத் தொடர் தென்னாபிரிக்காவின் 9 மைதானங்களில் நடைபெறுகின்றது.

இத் தொடருக்கான அனைத்துப் பணிகளும் முடிபடைந்துள்ளது என சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் (பிபா) அறிவித்துள்ளது.

இன்றைய ஆரம்ப போட்டியில் ஒ பிரிவைச் சேர்ந்த தொடரை நடத்தும் தென்னாபிரிக்க மற்றும் மெக்சிகோ அணிகள் மோதுகின்றன.

இப் போட்டி இன்று இரவு இலங்கை நேரப்படி 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. அத்துடன் இன்றிரவு இரண்டாவது போட்டியில் உருகுவே-பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன.

கால்பந்தாட்ட வரலாற்றில் முதன்முறையாக ஆபிரிக்க கண்டத்தில் உலகக்கிண்ண தொடர் நடப்பது இதுவே முதல் முறையாகும்.

**வித்தியாசமான பரிசு**

கோல் அடித்ததும் சிலர் சட்டையைக் கழற்றுவார்கள், டைவ் அடிப்பார்கள், நடனம் ஆடுவார்கள், பறக்கும் முத்தம் கொடுப்பார்கள்.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் கோல் அடித்ததும் தங்கள் சந்தோசத்தை ரசனையாக வெளிப்படுத்துவர்களுக்குப் பரிசு என்று அறிவித்திருக்கிறது பிபா. எனவே இம் முறை மைதானத்தில் அடிக்கடி சந்தோஷ நடனங் களைப் பார்க்கலாம்.




## ஜோகனஸ்பேர்க்கில் 2 இலட்சம் ரசிகர்களுடன் தென்னாபிரிக்க வீரர்கள் பிரமாண்ட ஊர்வலம்

(ஜோகனஸ்பேர்க்)

இரண்டு லட்சம் ரசிகர்களுடன் தென்னாபிரிக்க வீரர்கள் நேற்று முன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் ஊர்வலமாக சென்றனர்.

தென்னாபிரிக்காவில் உலகக்கோப்பை கால் பந்து தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்தப் போட்டிக்காக தென்னாபிரிக்க அணி கடும் பயிற்சி மேற்கொண்டது. பயிற்சி ஆட்டங்களில் இந்த அணி சிறப்பாகவே விளையாடியது.

இந்த உலகக்கோப்பைத் தொடரில் குறைந்த பட்சம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேற வேண்டும் என்பது தென்னாபிரிக்க வீரர்களின் கனவு. இதற்காக தாய் நாட்டு மக்களின் உற்சாக ஆதரவு வேண்டி தென்னாபிரிக்க வீரர்கள் ஜோகனஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் ஊர்வலமாக சென்றனர்.

வீரர்கள் பஸ்ஸில் வர சுமார் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட தென்னாபிரிக்க மக்கள் கலந்து கொள்ள ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தில் சென்றவர்கள் தென்னாபிரிக்க கொடியை ஏந்தியவாறு தென்னாபிரிக்க ஒற்றுமை ஓங்குக என்ற கோசம் விண்ணை பிளக்க சென்றன.

பிரமாண்டமான பலூன்கள் வானத்தில் பறக்கவிடப்பட்டன. வீடுகள் மற்றும் உயர்ந்த கட்டிடங்களில் இருந்து மக்கள் தென்னாபிரிக்க வீரர்கள் மீது பூ மாரி பொழிந்தனர்.

உணர்ச்சிகரமான இந்த ஊர்வலத்தை பார்த்த தென்னாபிரிக்க வீரர்கள் தங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதனர். முடிவில் தென்னாபிரிக்க வீரர்கள் அந்த நாட்டு அதிபர் ஜேக்கப் சூமாவை சந்தித்து வாழ்த்து [illegible]னர்.

## மரடோனா மாயஜாலம்; ஆர்ஜன்டீனா சம்பியன்

பதின் மூன்றாவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் கடந்த 1986ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் நடைபெற்றது.

இத் தொடர் முதலில் கொலம்பியாவில் நடப்பதாக இருந்தது. ஆனால் அப்போது கொலம்பியாவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, மெக்சிகோவுக்கு வாய்ப்பு கிட்டியது.

போட்டியின் பின் விளக்கமளித்த மரடோனா அது கடவுளின் கை என்றார். பின்னர் அரையிறுதியில் ஆர்ஜென்டீனா, பெல்ஜியத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மறுபுறம் பிரான்ஸ் அணியை 0-2 என்ற கோல்கணக்கில் வீழ்த்திய மேற்கு ஜேர்மனி அணி இறுதிப் போட்டி வாய்ப்பைப்பெற்றது.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டீனா வீரர் மரடோனாவின் ஆட்டத்திற்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் மேற்கு ஜேர்மனி வியூகங்களை அமைத்தது.




இத் தொடரில் மொத்தம் 24 அணிகள் பங்கேற்றன. முதல் சுற்றுப் போட்டிகள் ரவுண்ட் ரொபின் முறையில் நடைபெற்றன.

இச்சுற்றின் முடிபில் வெற்றிபெற்ற பிரேசில், போலந்து, பிரான்ஸ், இத்தாலி, மொரக்கோ, மேற்கு ஜேர்மனி, மெக்ஸிக்கோ, பல்கேரியா, ஆர்ஜென்டீனா, உருகுவே, இங்கிலாந்து, பராகுவே, சோவியத்யூனியன், பெல்ஜியம், டென்மார்க், ஸ்பெயின் ஆகிய அணிகள் இரண்டாவது சுற்றுக்கு (ரவுண்ட் ஒப் 16) முன்னேறின.

இத் தொடரில் மரடோனாவின் அசத்தலான ஆட்டம் ஆர்ஜன்டீனாவுக்கு பக்கபலமாக அமைந்தது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அணிகளான பிரேசில், இத்தாலி அணிகள்இம் முறை சாதிக்கத்தவறியது.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி வந்த ஆர்ஜென்டீனா காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை சந்தித்தது.

இப் போட்டியில் மரடோனாவின் ‘கை’ பட்ட சர்ச்சைக்குரிய கோலுடன் ஆர்ஜென்டீனா 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

இருப்பினும் மரடோனா அசத்தினார். இறுதியில் ஆர்ஜென்டீனா 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று உலகக்கிண்ணத்தை இரண்டாவது முறையாக கைப்பற்றியது.

இத் தொடரில் ஆர்ஜென்டீனா அணிக்கு தலைவராக செயற்பட்டு அசத்திய மரடோனாவின் ஆட்டத்தை ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறக்க முடியாது.

**துளிகள்**

மெக்சிக்கோ உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் 6 கோல்கள் அடித்து அசத்திய இங்கிலாந்து அணியின் கேரிலினேகர் தங்கப்பாதணி (கோல்டன் ஷூ) விருதைக் கைப்பற்றினார்.

சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி 5 கோல்கள் அடித்த ஆர்ஜன்டீனா வீரர் மரடோனா தங்கப்பந்து (கோல்டன் போல்) விருதை வென்றார்.

நீங்களும் அரச/சர்வதேச அங்கீகாரமுள்ள மருந்தாளர் (Pharmacist) ஆகலாம்!!

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஆரம்பமாகின்றது!!!

**Higher National Diploma in Pharmacy**
**(HND in Pharmacy - External- Batch - 2)**

இக் கற்கை நெறியானது Pharmacy வைத்திருப்போர் or Pharmacy ஒன்றை ஆரம்பிக்க இருப்போர் மற்றும் Pharmacist துறையில் தொழில் புரிவோருக்கு மிகவும் பயனுள்ள கற்கை நெறியாகும்.




முக்கிய குறிப்பு :-

இக் கற்கை நெறியை கற்றதன் பின்னர் நீங்கள் விரும்பின் UK இல் உள்ள அதி சிறந்த பல்கலைக்கழகங்களில் Bachelor Of Pharmacist (B.Pham) பட்டத்தை இலகுவில் பெற்று, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.

HND in Pharmacy examination conducted by Sri Lankan Medical Council SLMC registration
Admission criteria to sit for the external examination is G.C.E A/L Three passes with Chemistry
(Durations :- 18 Months )

WHAT DO YOU LEARN? LEARNING COMPONENT
Basic Pharmaceutical English Forensic
Pharmacy Pharmaceutics
Human Anatomy & Physiology
Pharmacology Pharmacognosy
Pharmaceutical Management Pharmaceutical Ethics
Pharmaceutical Marketing Practicals and Internship

Batch - II ஆரம்பம் :-
12/06/2010 & 13/06/2010
உங்கள் அனுமதிக்கு முந்துங்கள் !!!

மேலதிக விபரங்களுக்கு :-

UNI ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862 (Branches :- Jaffna & Manipa
(C-401)

## யாழ்.வலய பாடசாலைகளில் 15ஆம் திகதி சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளில் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முழு அளவிலான சிரமதானப் பணி இடம்பெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் விசேட ஆலோசனைக்கு அமைவாக திட்டமிட்ட வகையில் இச் சிரமதானப் பணியை எதிர் வரும் 15 ஆம்திகதி ஒழுங்குபடுத்துமாறு சகல பாடசாலை அதிபர்களையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ந-5)

# இலங்கை-இந்திய உடன்படிக்கைகள்...

இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங் கள் தொடர்பாக எந்தவித தகவல்களும் வெளி யாகவில்லை.

அது தொடர்பான விளக்கங் கள் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்படவும் இல்லை.

இந்த நிலையில் அது தொடர்பில் கருத்து கூறுவது இயலாத விடயம் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விளக்கமளித்ததன் பின்னர்தான் அது தொடர்பாக கருத்து கூற முடியும்.

நாட்டின் பாதுகாப்பு உறுதி படுத்தப்பட்டுள்ளதா? இந்த உடன்படிக்கை மூலம் இலங்கைக்கு நன்மைகள் ஏற்பட்டுள்ளனவா? நம்பிக்கை பாதுகாக்கப்பட்டிருக்கின்றனவா? என்பது தொடர்பாக எதுவும் தெரியவில்லை.

எனவே இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும் என தாம் கோருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ந-5)

# அமைதி நிலை இலங்கையில்...

ருக்கிறது. அதன்படி உலகளாவிய ரீதியில் இலங்கை 133ஆம் இடத்தில் உள்ளது. பிராந்திய ரீதியாகப் பார்க்கின்றபோது 22ஆம் இடத்தில் உள்ளது.

உலகில் உள்ள தீவு நாடுகளில் இலங்கையின் அமைதி நிலை தான் மிகவும் மோசமாக உள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இடம்பெற்று முடிந்த யுத்தம், அதனால் ஏற்பட்ட பேரழிவுகள், மனித உரிமைமீறல்கள் ஆகியனவே இலங்கையின் இந்நிலைமையில் செல்வாக்குச் செலுத்தி இருக்கின்றன என்று அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் அயல்நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அமைதி நிலையும் இலங்கையைப் போலவே மிகவும் மோசமாக இருக்கின்றது என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

# உ.அ.அ. அலு...

இதன்படி அரசின் அபிவிருத்தி இலக்கை துரிதமாக எட்டுவதற்கு நிர்வாகத்துறை பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பதற்கும் இதுவரை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்காக இயங்கியவை பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்படுகிறது. (ந-5)

# அமைச்சர் டக்ளஸ் குறித்து...

சிறையில் அடைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா ஓராண்டுக்குப் பிறகு விடு தலை செய்யப்பட்ட அவர் இலங்கைக்குச் சென்றார் ஆனால் அவர் மீதான வழக்குகள் தொடர்பாக சென்னை 6ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் டக்ளஸ் தேவானந்தாவை தேடப்படும் நபராக அறிவித்தது. அந்த அறிவிப்பு இன்னமும் நிலுவையில் இருக்கின்றது.

இந் நிலையில் தற்போது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியா வந்திருக்கும் அவரை கைது செய்யவேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருக்கிறது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்து புதுடில்லி காவல் துறையினருக்கு தகவல் அனுப்பியிருப்ப தாக சென்னை காவல்துறை ஆணையர் டி.ராஜேந்திரன் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

தேவானந்தாவைக் கைது செய்யக் கோரும் மனு இன்று வெள்ளிக்கிழமை சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# வவு.புனர்வாழ்...

சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவர்களுக்கான திருமாங்கல்யத்தை அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ந-5)

# எந்த விசாரணையையும் சந்தி...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எந்த நேரத்திலும் கைதாகலாம் என்ற தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந் நிலையில் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் இந்தியா-இலங்கை இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி எனக்கு ஏற்கனவே மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அதனால் எந்த வழக்குகளும் என்னைக் கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் நான் எந்த விசாரணையையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழக மக்கள் உரிமைக்கழகச் செயலாளரும் சட்டத்தரணியுமான புகழேந்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது ஏற்கனவே கொலை, கொள்ளை தொடர்பாக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில் இந்தியா வந்துள்ள அமைச்சரை கைது செய்ய மத்திய மாநில அரசுகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் அவர் அந்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# ஜனாதிபதி...

அவர்களை ஹிமாச்சல் பிரதேச அமைச்சர் ராஜீவ் பிந்தால் வரவேற்றார். பின்னர் ராஜபக்ஷ தம்பதியினர் சப்ரா சென்றனர்.

அங்குள்ள ஹோட்டல் வைல்ட் பிளவர் ஹாலில் 2 நாட்கள் தங்கி ஓய்வெடுக்கின்றனர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷ பேசுகையில் இந்திய, இலங்கை அரசுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார சமூக உறவுகளை மேம்படுத்தும் என்றார். (ந-5)

# சீனா, இந்தியாவுடன் இலங்கை...

இவ்வாறு அவுஸ்திரேலியாவின் பிரபல முன்னாள் இராஜதந்திரிகளில் ஒருவரும், இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் துணை உயர்ஸ்தானிகராக 1994 ஆம் ஆண்டு கடமையாற்றியவருமான புரூஸ் ஹெய்க் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நட்பு விவகாரங்கள் குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் அவர் முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு,

இலங்கைத் தூதரகங்கள் அரசியல் மயப்பட்டுவிட்டன. அவை புலம்பெயர் தமிழர்களுக்கு எதிரான நிகழ்ச்சி நிரல்களை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

தமிழர்களுக்கு தொல்லை கொடுக்கின்றன. இலங்கைத் தூதரகங்கள் அமைந்திருக்கும் அந்தந்த நாடுகளின் இணக்கத்துடன் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தற்போது நிலைமை மாறுகிறது. ஏனெனில் அந்நாடுகள் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டன.

ஐ.நாவின் சர்வதேச குற்ற விசாரணைகளுக்கு இடம்கொடுக்காமல் இருப்பதன் மூலம் இலங்கையின் பெயர் கெடுகிறது. இலங்கையே அதன் பெயரை கெடுக்கிறது. இலங்கையின் யுத்தக் குற்றங்கள் உள்நாட்டு விடயங்கள் அல்ல.யுத்தக் கைதிகளை படுகொலை செய்தல். அப்பாவி பொது மக்களை கொலை செய்தல், அப்பாவி பெண்களை கற்பழித்தல் என்பன எப்படி உள்நாட்டு விடயங்கள் ஆகிவிடமுடியும்.

இலங்கைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் கிடைக்கப்பெற்றது உண்மையான வெற்றி அல்ல. ஏனெனில் சிவில் யுத்தத்தின் மூலப் பிரச்சினைகண்டறிந்து தீர்க்கப்பட வில்லை. தமிழ் அரசியல் கட்சிகளுடன் அர்ப்பணிப்பு, பற்றுறுதி, விசுவாசம், நம்பிக்கை, புரிந்துணர்வு ஆகியவற்றுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

ஆனால் அரசுத் தரப்பில் இவை ஒன்றையும் காண முடியாமல் உள்ளது என்று தெரிவித்துள்ளார். (ந-5)

# நாடுகடந்த தமிழீழ அரசுக்கு...

நாடுகளின் தங்களின் சர்வதேச வலையமைப்பை விஸ் தரிப்பதற்கு புலிகள் முயற்சிக்கின்றார்கள் அதற்கான தளமாக வெனிசுலாவை தேர்ந் தெடுத்துள்ளார்கள்.

வெனிசுலா அரசின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற முயற்சிக்கின்றார்கள். ஆகவேதான் அகதிகள் என்ற போர்வையில் இந் நாட்டுக்குள் ஊடுருவுகிறார்கள். ஆஸி நோக்கி 300 பேருடன் புறப் பட்ட புலிகளின் கப்பல் ஒன்று வெனிசுலாவுக்கு வருகிறது என்று எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டவர்கள் வெனிசுலாவுக்கு வருகின்றமையின் நோக்கம் இதுவே ஆகும்.

ஆனால் இலங்கைக்கும் வெனிசுலாவுக்கும் இடையில் மிகவும் நெருக்கமான நட்பு உண்டு.


இரு நாடுகளின் ஜனாதிதிகளும் மிக நெருக்கமான நண்பர்கள்.

இலங்கையில் முட்கம்பி முகாம்கள் என்று எவையுமே இல்லை.

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இல்லை.

யுத்த குற்றங்களை புரியவே இல்லை. இவையெல் லாம் புலிகளின் பொய்ப்பிரசாரங்களாகும் என்றும் தெரிவித்தார். (ந-5)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
27
12
1946

விண்ணில்
14
05
2010

### அமரர் குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம்

கடந்த 14.05.2010 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும் மலர் வளையங்கள் வைத்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வ நன்றிகள். மற்றும் அன்னார் சென்றல் நேர்சிங் ஹோம், யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்தபோது அவருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம். வீட்டுக்கிருத்தியம் 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு

44, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
06
01
1944

உதிர்வு
11
06
2009

### அமரர் பரமகுரு சற்குரு

(முன்னாள் ஈழநாடு அச்சுக்கோப்பாளர்)

ஓராண்டாகியும் உறவுகள் நாம்
கதறுகின்றோம்
எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
விளங்கிய எமதருமை அப்பாவே
உமது அன்பான பார்வையும்
கனிவும் எமது நெஞ்சை விட்டகலாது

பண்ணாகம்

அன்புடன் தவிக்கும்
மனைவி, மக்கள்.

(1668)

## நியூசிற்றி ரேடேர்ஸ்

எமது ஸ்தாபனத்துக்கு எலக்ரிக்கல்,எலக்ரோனிக் பொருட்களை சிறந்த முறையில் திருத்தக்கூடிய ஒரு ரெக்னீசியனும், மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் விற்பனை செய்யக் கூடிய விற்பனையாளரும் உடன் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

நியூசிற்றி ரேடேர்ஸ்

319-A கே.கே.எஸ்.ரோட் ,யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212223226

(த-407)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.